£ 895

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமுல்லைவாயிற் புராணம்.

தருமபுரவாதீன வித்துவான்

ஸ்ரீமத், வடுகநாத தேசிகர்

இயற்றியது.

—※※—

தருமையாதீனத்து மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ,

சுப்பிரமணிய தேசிக ஸ்வாமிகள்

கட்டளையிட்டருளியபடி

பிரசுரிக்கப்பெற்றது.

ஸ்ரீகாழி, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

பதிப்பாசிரியர்.

—※—

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1 சென்னை-1

12 AUG 1928

உ

கணபதி துணை.

# திருமுல்லைவாயிற்புராணம்.

திருவாரூர் வைத்தியநாத நாவலரவர்கள்

குமாரர்

சீகாழி வடுகநாததேசிகரவர்கள்

இயற்றியது.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து மஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

ஸ்ரீகாழி மகா-ள-ள-ஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளையவர்களால்

சீகாழி:

'திரிபுரசுந்தரி' பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரதி-ரூ.] 1927. [காப்பி ரைட்.

PRINTED AT THE
'THIRUPURASUNDARI' PRESS,
SHIYALI.

உ

சிவமயம்.

# திருமுல்லைவாயிற் புராணம்.

## முகவுரை.

*வாகை-வல்லாண் முல்லை.*

வாயில் வினையறக்கும் வானமுதர் தேன்முல்லை
வாயில் குடவளஞ்சேர் வாயிற்றே—காயிற்
கோடும்புரந் தாமக் குனிவில் லெடுத்தா
னடும்புரந் தாமத்த னார்பு.

எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமும் உடைய சிவபெருமான் தாம் ஒருவரேயாய்ப், பசுக்கள் யாவுந் தமக்கு என்றும் உடைமைப் பொருள்களேயாகத் தாம் என்றும் உடையவராயே நின்று, பசுபதி எனப்படும் தாம் பிரபஞ்சம் எங்கும் நீக்கமற வியாபித்து நிற்பாராயினும், அவ்வுண்மை யாவருக்கும் விளங்காதாகலின், யாம் எளிதின் வழிபட்டுய்யுமாறு திருவுளங்கொண்டு எண்ணில்லாத சிவஸ்தலங்களைப் பூமியில் வைத்தருளினார். அவற்றுட் சோழமண்டலத்து ஆலிநாட்டின்கண் காவிரிநதியின் வடபாற் சமுத்திர தீரத்திற் சிறந்து விளங்குவது தென் திருமுல்லைவாயில். இத்திருப்பதி திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன கர்த்தர் பரிபாலனத்துக்குட்பட்டது. இவ்வாலயம் கி.பி கஅகஉ-ல் சீகாழி ஸ்ரீமத் சிதம்பரநாதமுதலியாரவர்களால் ஜீர்ணோத்தாரணமும் மஹாகும்பாபிஷேகப்பிரதிஷ்டையும் செய்விக்கப்பெற்றது.

இத்தலமான்மியத்தைத் தருமபுரவாதீனத்துத் திருவாரூர் வைத்தியநாதநாவலரது நான்காம் புத்திரர் வடுகநாததேசிகர் (க௭கஎ—க௭அஎ) இயற்றினார். இவர் சீகாழியில் வசித்தவர். பிரபல கவிஞராகிச் சென்னையிற் றுறைசைக் கச்சியப்பமுனிவர் (க௭௫௨—க௭அக) விநாயகபுராண மரங்கேற்றியபோது அச்சபைக்கு நாயகராக வீற்றிருந்தா ரென்பதால் இவர் கல்வித் திறமும் ஆன்றவொழுக்கமும் அறியப்படுவன. இப்புராணவேடு எனது தந்தை கைவசமிருந்ததை ககூகஉ-ல் திருவாரூர் இலக்கண விளக்க பரம்பரைச் சோமசுந்தரதேசிகர் மிக்க பிரியத்தோடும் பிரதிசெய்து கொடுத்தனர்.

இந்தப் புராணத்தைப் பிரகடனஞ் செய்து உதவுதற்கு எல்லாவுரிமையும் உடையவர்கள், திருக்கைலாய பரம்பரைத்

தருமபுரவாதீனத்து ௨௫-வது மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதிகளே ஆதலின் அப்பெருந்தகையாளர்க்கு இதனை உரிமைப்படுத்தி உரிமையுரை ஒன்று வரைந்து திருச்சமுகத்திற்குச் சமர்ப்பித்துள்ளேன்.

திருஞானசம்பந்தரது திருத்தேவாரம் பெற்ற இப்பெரும் பதியின் இம்மான்மியம் ஸ்ரீ ஸத்தியாநந்த ஸௌந்தரி ஸமேத ஸ்ரீ யூதிகா பரமேச்வரசுவாமியின் பிரபாவத்தை எடுத்துக் கூறும் ௯ சருக்கம் உடையது. இச்சருக்கங்களின் வசனத்தைச் சுருக்கமாகப் பிற்பகுதியிற் சேர்த்துள்ளேன். முல்லைவனநாதரையும் அணிகொண்ட கோதையையும் பூசித்துப் பேறு பெற்றதாக இப்புராணத்துட் கூறும் சோழவரசன் கிள்ளிவளவன். இவ்வளவன் திருமால் பிரமன் மரீசி காசிபன் விவஸ்வான் மநு இக்குவாகு ககுத்ஸ்தன் மாந்தாதா முசுகுந்தன் (காலனுக்கிது வழக்கெனவுரைத்தவவன்) பிருதுலாக்ஷன் சிபி சோழமண்டலந்தாபித்த சுராதிராஜன் இராசகேசரி பரகேசரி இவர்களுக்குப் பின்னோன். தஞ்சைராஜராஜனுள்ளிட்டார்க்கு முன்னோன், காலனுக்கிது வழக்கெனவுரைத்த வவன் (கலிங். பரணி ௧௭௮). இக்கிள்ளிக்குப்பின் இவன் குலத்துத் தோன்றிய இவன் நாமத்தவர் பலர். அவருட் கூடலாங்கண் பழையன் மாறனைப் பொருது சாய்த்துக் கோதைமார்பனாற் பாராட்டப்பட்ட கிள்ளிவளவன் ஒருவன் (அகம் ௩௪௬, நக்கீரர்). சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் ஒருவன் (புறம் ௩௭௩, கோவூர்கிழார்). சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஒருவன் (புறம் ௩௪—௪௧, ௪௬, ௬௯, ௭௰, ௧௭௩, ௨௨௬—௮, ௩௮௬, ௩௯௩, ௩௯௭ ஆலத்தூர்கிழார் வெள்ளைக்குடிநாகனார் மாறோக்கத்து நப்பசலையார் ஆவூர்மூலங்கிழார் கோவூர்கிழார் ஆடுதுறைமாசாத்தனார் ஐயூர்முடவனார் நல்லிறையனார் எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார்), இக்கிள்ளி சிறுகுடிகிழான்பண்ணனைப்பாடிய புலவனுமாவன் (புறம் ௧௭௩). இத்தொல் குடிவளவர் காலத்தே பிராசீனஸ்தலமாக இலங்கியது இம்முல்லைவாயிலெனின் இதன் தொன்மையும் பெருமையுங் கூறுதற் கியையுமோ? இப்பழம்பதிமான்மியத்தை யாவருமுணர்ந்து சிவபிரானை மெய்யன்போடு வழிபட்டுய்தற்பொருட்டு மஹாசந்நிதானத்தின் கட்டளையைச் சிரசாவகித்து இந்நூலைப் பிரசுரிக்கத் துணிந்த என் துணிவைப் பெரியோர் ஆதரிப்பார்களாக.

ஸ்ரீகாழி, பிரபவஹு
சித்திரைமீ ௧௨ } ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை.

### திருக்கைலாசபரம்பரைத் தருமபுரவாதீனத்து

### ௨௫-வது மஹாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்தபண்டாரசந்நிதியவர்கள்

# திருமுன் விஞ்ஞாபனம்.

பாடாண்டிணை-உடனிலைத்துறை.

உலகு திகழுக வோங்கி யிலகறம்
விளரிவண் டிமிரத் தளையவிழ் முல்லை
விளைபுன முருக்கத் துளைதரு தோற்றங்
களங்கனி மிடற்றுக் கண்ணுத னிறத்துத்
துளங்குவெண் டலைநிரை விளங்குவ கடுக்குந்
துடவை செறீஇப் படர்தரும் பாண்டி
மண்டிலத் தவனியர்க் கொண்டிறற் றகைநீஇ,
யிவனே யிளங்கதிர் தவழுகிர் தோற்றத்துப்
பரைபாற் றளிர்த்த பன்னிறச் சத்தியாக்
காவிரி கிளைத்துக் கணக்கில் காலெழுப்
பூவிரி வளவர்தம் புனனாட் டாங்கண்
தொண்டியர் பரசுந் தொண்டைய ராண்டகை.
நீயே செம்மலை நிலைத்தெனப் பரஞ்சுடர்
தாயே நிற்பத் தாழ்வி லாற்றலி
னுருப்பிறழ்ந் தொருவ னும்பர் நாணவுந்
தருக்குற் றொருவன் றாணிலை பேணவுந்
துருவிய குறியினைச் சுட்டுதல் கருதி
நொச்சியுங் கிடங்கும் னோன்றுநிற் பனவென
நச்சுநர் நவிற்று நாமக் கூடலாய்,
இவனே யுடலுயி ரியக்க மிறைவனை
திவரிய வின்றி யியங்கா வென்னப்
புலப்படுத் தற்காப் பொறிபல சுமந்த
தலத்தொளிர் முனிவரர் தருமையிற் கூடுவான்.
மங்கல குணந்தான் மலிந்தவ னென்றும்
பங்கமும் மலமில் பண்பின னென்றும்
நிறைசிவ னென்றும் பறைமொழி யவற்று
லரணிலை முழக்கும் விரிந்த வாரண
விழுப்பொருள் சொக்க மேலவ னீஇ,
யருவுரு குறிகுண மடிமுடி நாப்பண்
தருநிலைக் கட்டுச் சார்பிலா வீடு

தணந்தவ னாகித் தனித்தவன் பதியாம்,
வெண்சிலை போன்று வியனிலை பற்றும்
புண்ணிய னிலையின பசுவாம், அவற்றைத்
திண்ணிதி னுறுத்துவ திரிமலம், இவற்றை
பண்ணலஞ் செழுத்தே யகற்றுவ னென்று
முண்மைச் சொரூப முவப்ப நுவலு
மண்ண லாகமத் தப்பொருள் சுப்பிர
மணிய தேசிக மாசிலா மணியிவன்.
அங்கயற் கண்ணி பங்கின னீஇ,யுளப்
பங்கயச் செல்வி பாங்கின னிவனே.
கண்ணுதல் கண்டங் கறுத்தோ னீஇ,
ஒண்டக வாங்கவை யொறுத்தோ னிவனே.
அறிவான் றானே யறிவிப் பானே
யறிவா யறியும் அவனுந் தானே
அறியும் பொருளு மவன்றா னேயே
யுடனின் றாங்குத் திடனுறக் கெழீஇ,
பெருங்குற் றனிறை யென்றிசைப் பவர்தம்
நெஞ்சுற் றன்னவின் னீர்மைய ராகலின்,
பேறு டப்பெரும் பேறளிப் பானும்
நீறு தவப்பூக்க நீயிரே யாகலின்,
இனியவை முளவோ வெமக்கிந் நிலையினும்
மருமலர்க் கமலையும் வளஞ்சால் தருமையுந்
தருநில மென்னக் குழீஇய வாறு
திருமுக மலர்ந்த செழுந்தமிழ் வேந்தீர்
பிறிதுநர் கேண்மினும் பிறங்கிசை வாழிய
வாழிய நிகமம் வாழிய வாகமம்
வாழிய வடியவர் மாண்பமர் குழாஅத்து
வாழிய தருமை மாபட் டவணை
ஞானசம் பந்த நற்பெயர் கொளீஇ
மோனதா தாண்டிய முறுகக் கூடலின்
புறப்புற நெறியும் புறமார் நெறியும்
அகப்புற நெறியு மகற்றியவ் வகஞ்சால்
செம்மை நெறியே யம்மைய சரதம்
ஆங்ஙனம் வென்றிங் கசைவில்சித் தாந்த
மாப்பெரு வென்றி யடைந்தனிர் நிற்பீர்.
இருவரு மொருங்கே யிசைந்தனிர் மருவலிற்
பெருநிலை மடங்கலும் பெருநெறி யிலகநுங்
கைவயப் படுதல் மெய்யே யன்றோ
பொய்யா காதென வெய்யா தறைவல்.

அதனால்

நுந்திரு மடத்து நூல்வல் லாருட்
செந்திரு மாலெனச் சீரியன் வடுகன்
பேரா காரன் பேரா முல்லை
வாயி லென்னுநும் வாழ்க்கைமேம் பாடு
மொழிந்தன னதனை வழிப்படுத் துவிடென
வச்சத் தோடுநும் பக்க லியம்புங்
கொச்சை மழலைக் கோடணைக் குதவுதிர்
பரம்பொருண் முக்கட் பரமனென் றென்று
முரண்படு மூகர் மொய்வலி தொலைப்பான்
பெரும்பிணி தீர்க்கும் பேருண் மந்திரஞ்
சைவ மடங்க ளைப்பதி னெட்டினு
மைந்தே யைந்தென வருவதிப் பதற்கோ
விருபத்து மூன்றா விரும்பு பட்டத்
தம்பெயர் ஞானசம் பந்த ராயினிர்.
சாதன முற்றிய சாதிப் பானைங்
கோதன மாநுங் குரைகழற் பணிகளும்,
இறைபணி யாகக் கறைய வெவ்வினை
தேடலி னுகர்விற் கூடலிற் கழித்துச்
சேர்சி மாயை செறியிருண் மூலஞ்
சோர்ச்சியி னவியத் தூய தொண்டின்
மலரடி வைத்து மன்னுதா னைக்கியும்
அலர்ப்பத நிழற்கீ ழமர்த்தி யணைந்திங்
கொப்பச் செய்தும் ஒருவ னாகிச்
செப்பம் நின்றிடச் சீரதி னடக்கியும்
இருத்தி யானந்த சொரூப மியைத்தும்
சிவனு பந்தொடர் சிவபோ கம்வரை
அணைந்தோ னாகப் புணர்ந்தனிர் கேண்மின்

அஃதான்று,

நின்மலஞ் சார நிலவிய வவத்தையுட்
பன்மயல் கடிந்து பகரும் விகாரி
யல்ல னாக்கித் தொல்லைச் சாக்கிரம்
தன்வணந் தந்து தாவில் சொப்பனம்
ஆரச் செய்திங் கரும்புஞ் சுழுத்தி
நீரக் கடக்கி நீடருந் துரியம்
ஆனந்தா தீதத் தழுத்திய வதீதம்
பெறுவான் புரிந்து பிணைஇ யுவந்தனிர்.

அஃதான்று,

உயிர்தனைப் புல்லி யுரியதா னாக்கிச்
செயிரற வணைந்து தீதற வடக்கி
வேதித் தமுதஞ் சாதித் திருந்தனிர்,
காந்த மனல்புனல் காந்துங் குளிகை
பொன்னய முப்புப் புகரறு சீருணை
யிவற்றொடு மருவ லியைய லீங்குக்
குன்றுத லிலனைப் பொன்றுத லிலனைப்
சமத்துவ முளனைச் சமைத்துற் பத்தி
யாதி யாதற் கிழுக்கிலி ரன்னா
னநுபவ மொன்றற் கநுகுண னாக
நல்கினிர் பரவ. நற்றமிழ்க் கமலை
பல்வளஞ் சுரப்பப் பாரகத் துதித்த
ஞானப் பிரகாச மானவ ராதலி
னென்று மினிதி னியைகநும் மியைபு.
சைவநற் கவசஞ் சாத்தி நீவிர்
மெய்ப்புரி வாளாற் பொய்ப்பகை களைஇப்
புகழும் வலியும் நிகழுங் கொடையும்
அளியுங் கவினுதிர் களியாம் பெறற்கே.

## உரிமையுரை.

முப்புவ னத்து மிக்க முல்லைமான் மியமர் மாலை
யிப்புவித் தருமை ஞானத் திலகுமா தீன கர்த்தர்
சுப்பிர மணிய நாமச் சுரேந்திரர்க் குரிய தாமாற்
றப்பிலா தணிந்தேன் முத்துத் தாண்டவ ராயப் பிள்ளை

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தென்திருமுல்லைவாயிற்றேவாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது.

பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்ட
னடமன்னு துன்னு சுடரோ
னொளிமண்டி யும்ப ருலகங் கடந்த
வுமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்க டங்கு மதுவிற்
றெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடுந்
திருமுல்லை வாயி லிதுவே. (௧)

பருவத்தில் வந்து பயனுற்ற பண்ப
னயனைப் படைத்த பரம
னரவத்தொ டங்க மவைகட்டி யெங்கு
மரவிக்க நின்ற வரனூ
ருருவத்தின் மிக்க வொளிர்சங்கொ டிப்பி
யவையோத மோத வெருவித்
தெருவத்தில் வந்து செழுமுத் தலைக்கொ
டிருமுல்லை வாயி லிதுவே. (௨)

வாராத நாடன் வருவார்தம் வில்லி
னுருமெல்கி நாளு முருகி
லாராத வின்ப னகலாத வன்ப
னருண்மேவி நின்ற வரனூர்
பேராத சோதி பிரியாத மார்பி
னலர்மேவு பேதை பிரியா
மராத காத னெதிநேர நீடு
திருமுல்லை வாயி லிதுவே. (௩)

ஒன்றொன்றொ டொன்று மொருநான்கொ டைந்து
மிருமூன்றொ டேழு முடனா
யன்றின்றொ டென்று மறிவான வர்க்கு
மறியாமை நின்ற வரனூர்
குன்றொன்றொ டொன்று குலையொன்றொ டொன்று
கொடியொன்றொ டொன்று குழுமிச்
சென்றொன்றொ டொன்று செறிவா னிறைந்த
திருமுல்லை வாயி லிதுவே. (௪)

கொம்பன்ன மின்னி னிடையாளொர் கூறன்
விடைநாளு மேறு குழக
னம்பன்னெ மன்பன் மறைநாவன் வானின்
மதியேறு சென்னி யரனூ
ரம்பன்ன வொண்க ணவரா டரங்கி
னணிகோ புரங்க ளழகார்
செம்பொன்ன செவ்வி தருமாட நீடு
திருமுல்லை வாயி லிதுவே. (௫)

ஊனேறு வேலி னுருவேறு கண்ணி
யொளியேறு கொண்ட வொருவ
னானேற தேறி யழகேறு நீற
னரவேறு பூணு மவனூர்
மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி யாடு
திருமுல்லை வாயி லிதுவே. (௬)

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமல
னஞ்சாடு சென்னி யரவாடு கைய
னனலாடு மேனி யரனூர்
மஞ்சாரு மாட மனைதோறு மைய
முளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொ
டிருமுல்லை வாயி லிதுவே. (௭)

வரைவந் தெடுத்த வலிவா ளரக்கன்
முடிபத்து மிற்று நெரிய
வுரைவந்த பொன்னி னுருவந்த மேனி
யுமைபங்க னெங்கள் பரனூர்

வரைவந்த சந்தோ டகிலுந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபாற்
றிரைவந்து வந்து செறிதேற லாடு
திருமுல்லை வாயி லிதுவே. (௮)

மேலோடி நீடு விளையாடன் மேவு
விரிநூலன் வேத முதல்வன்
பாலாடு மேனி கரியானு முன்னி
யவர்தேட நின்ற பரனூர்
காலாடு நீல மலர்துன்றி நின்ற
கதிரேறு செந்நெல் வயலிற்
சேலோடு வாளை குதிகொள்ள மல்கு
திருமுல்லை வாயி லிதுவே. (௯)

பனைமல்கு திண்கை மதமா வுரித்த
பரமன்ன நம்ப னடியே
நினைவன்ன சிந்தை யடையாத தேரா
ரமண்மாய நின்ற வரனூர்
வனைமல்கு கைதை வகுளங்க ளெங்கு
முகிளங்க ளெங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாச நாறு
திருமுல்லை வாயி லிதுவே. (௰)

அணிகொண்ட கோதை யவணன்று மேத்த
வருள்செய்த வெந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி
திருமுல்லை வாயி லிதன்மேற்
றணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான
மிகுபந்த னொண்ட மிழ்களி
னணிகொண்ட பத்து மிசைபாடு பத்த
ரகல்வான மாளவர் மிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

—*—

பிரதிபேதம்:—௧. பாடு. ௬. அரனூர். ௮. அரனூர். ௰. வள.

## தென் திருமுல்லைவாயிற்றேவாரம்.

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்.

வைகுமந் நாளிற் கீழ்பான் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயில் உள்ளிட்
டெய்திய பதிக ளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச்சொன் மாலை.

திருச்சிற்றம்பலம்.

—※—

உ

பிறங்குசீர்ப் புராணந் தன்னைப்
பெரும்புவி யச்சி னேற்ற, நிறந்தரு பொன்னை யீந்த
திருபர்தம் புகழ் கூறிற்று.

——※※——

முருந்தன மூரலார் முல்லை மான்மியம்
பருந்தன மிறைஞ்சுமத் தருமைப் பண்ணவர்
மருந்தன சுப்பிர மணிய தேசிகர்
கருந்தன மீயநற் காட்சி சான்றதே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமுல்லைவாயிற் புராணம்.

## (௧) கடவுள் வாழ்த்து.

### காப்பு.

சத்தி யானந்தத் தாயுமை பங்கினன்
சத்தி யானந் தழைக்குந் தமிழ்சொலுஞ்
சத்தி யாவுந் தருந்திரு முல்லைவாழ்
சத்தி யானையின் றாமரைப் பாதமே.

### மாசிலாமணிநாதர்.

நீர்மருவுஞ் சடைமுடியுந் திருவடியு மாதியந்த நிலைமை காணச, சீர்மருவுந் திருநெடுமா லேனமாய்ப் படியிடந்து தேடக் கஞ்சத், தார்மருவுஞ் சதுர்முகத்தோ னோதிமமாய்ப் பறந்து விண்ணுந் தாழத் தேட, வேர்மருவும் பேரொளியாய் வளர்ந்த முல்லை வனப்பொருளை யிறைஞ்சி வாழ்வாம். (௧)

நின்மலமாய் நித்தியமாய் நிட்களமாய் நிராமயமாய் நினைவுக் கெட்டாச, சின்மயமாய்ப் பல்லுயிர்க்குந் தோற்றமா யுணர்வரிய தெளிவு மாகித், தொன்மயமா யைந்தொழிலுந் தொகுத்தருளே தனுவாகித் தோன்றுந் தேவைப், பொன்மதில்சூழ் முல்லைவனத் தினிதிருந்த பரம்பொருளைப் புந்தி சேர்ப்பாம். (௨)

### வேறு.

அல்லைவனப் பழித்தகுழ லருள்பொழிவேற் கண்ணி
யணிகொண்ட கோதையிடத் தணிகொண்ட மணியைத்
தொல்லைவன சத்தவனு நாரணனுங் காணாச்
சோதியைநா தாந்தபரஞ் சுடரான முதலைத்
தில்லைவனத் தருணடனங் குனித்துநின்ற தேவைத்
தெய்வசிகா மணியைமறை தேடியுங்கா ணாத
முல்லைவனப் பெருமானை மாசிலா மணியை
முக்கணனு பகனையா முன்னியிறைஞ் சிடுவாம். (௩)

### அணிகொண்டகோதையம்மை.

பூமகளு நாமகளும் போற்றிசைக்கும் பதத்தாளைப் போதார்
தெய்வத், தாமநறுங் குழலாளைத் தடவரையைப் பழித்ததனத்
தடத்தி னாளைக், காமனுருக் கடிந்தவனுங் காமமுறப் பொருத
கயற் கண்ணி னாளைப், பாமருவு முல்லைநக ரணிகொண்ட கோ
தையையாம் பணிதல் செய்வாம். (௪)

### தக்கணாமூர்த்தி.

மைக்கணாள் மலைமகள் வழுத்து மேன்மைசே
ரக்கண யகருட னன்று தோன்றிய
முக்கண யகன்றிரு முல்லை மாநகர்த்
தெக்கண மூர்த்திதாள் சிந்தை செய்குவாம். (௫)

### வயிரவர்.

உண்ட கஞ்சுகரு செல்வமுண் டருளுமுண் டௌமா
முண்ட கஞ்சுக மலர்தரப் பூம்பொழின் முகத்துப்
பண்ட கஞ்சுகம் பயிலிசைக் காழியம் பதியிற்
கண்ட கஞ்சுக னிணைசசரண் பணிவது கடனே. (௬)

### வரசத்தி விநாயகர்.

பெருங்களிற்று முகப்பதகன் புயங்களிற்று விழவந்து
மொருகளிற்றின் முன்னடங்தோ னொளி திகிரிக் கிரங்கிடநேர்
தருகளிற்றி னிருணிறஞ்சேர் சமர்க்களிற்றி னுரியார்பால்
வருகளிற்றைத் திருமுல்லை வனக்களிற்றை வணங்குவாம். (௭)

### முருகக்கடவுள்.

பார்காட்டுந் திசைமுகத்துப் பண்ணவனைச் சிறைகாட்டி
வார்காட்டுந் தனக்கோட்டு வள்ளியொரு புறங்காட்டிக்
கார்காட்டுந் திரைகடலிற் கவிழிணர்மா முகற்றுணியக்
கூர்காட்டு மிருதலைவேற் குமரனிணை யடிபணிவாம். (௮)

### திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

ஒருமைதரும் பரம்பொருள்பா லுமைமுலைப்பால் தருவிருப்பா
லருமைதருந திருப்பதிக மண்ணலதலந் தொறும்பாடிக்
கருமைதருஞ் சமண்கிளையைக் கழுவேற்றிச் சிவசமயப்
பெருமைதரும் புகழ்க்காழிப் பிள்ளையார் பதம்போற்றி. (௯)

### திருநாவுக்கரையராதியர்.

நாவரசி னருள்போற்றி நம்பிதிரு நாவலூர்த்
தேவரசி னடிபோற்றி சிறந்ததிருப் பெருந்துறைக்குண்
மேவரசின் கழல்போற்றி மேதகுமந் திரமாலைப்
பாவரசின் சரண்போற்றி பரவுமன்பர் பதம்போற்றி. (௰)

### நந்திதேவர், சண்டேசப்பிள்ளையார்.

சுரருடம்பினுந் தவருடம்பினுந் துதிநிறைந்தவிஞ் சைய ருடம்பினும், பரவுதண்பிரம் படிதழும்பிடும் பரமநந்திதன் பத மிறைஞ்சுவாம், பிரணவஞ்சொலுங் குரவனந்தணன் பெருகு தந்தைதன் றாள்தடிந்தவன், ··றரனணிந்தகொன் றையுமணிந்து நின் றருள்வழங்குதண் டியைவணங்குவாம். (௧௧)

சைவமே வளர்க வேதந் தளிர்கமா தவங்கள் சூழ்க
மெய்வளம் படர்க மேன்மேல் வேந்தெலாம் வாழ்க வென்று
மைவளர் கண்டன் கீர்த்தி மன்னுக முல்லை மூதூர்த்
தெய்வமாக் கதைமண் மீது சிறப்பொடு தழைக வென்றே. (௧௨)

கடவுள் வாழ்த்து முற்றும்.

---

## அவையடக்கம்.

இரும்பதனாற் பொன்விலைமே விடச்சொல்வ போலெவரு மெள்ளு நொய்மைத், துரும்பதனாற் றூண்வலிமை சொற்படுவ போற்கைப்புத் தோன்றும் வேம்பாற், கரும்புமிகு[illegible]வைபெறுவ போற்சிறியேன் புன்கவியாற் கவிஞர் சேர்த்த, பெருந்தமிழும் புகழ்பெறுமா லென்றமிழ்க்கு மவர்புகழ்ச்சி பேச லாமால். (௧)

தென்மாந்தை வேளாள னிராகவன்சேய் வீரப்பன் சிந்தை போலு, மென்மனமுந் தழைத்தோங்கி முல்லைவனச் சரிதைசிறி தியம்ப லுற்றேன், பொன்மகளைப் பொருந்தியமால் மண்மகளைப் பிரிந்ததனே புலமை மிக்கோர், நன்மதியாற் பேரான வடுகன் வாய்த் தமிழென்றா னவைசொல் லாரே. (௨)

அவையடக்க முற்றும்.

---

## (௨.) நகர்வளச்சருக்கம்.

பொன்னுல குவரி யாடைப் புவியினு முளதோ வென்னத்
துன்னுமா ளிகையு நீடு சூளிகைப் பரப்புந் தாவில்
மின்னுதோ ரணமுஞ் சூழும் வீதியும் வேலை யார்ப்பு
மன்னுதென் முல்லை மூதூர் வளம்பல விளம்ப லுற்றேன். (௧)

வேறு.

செய்யகதி ராதவன்போ லெழுந்தமுகில் கருங்கடற்றெண்
டிரைநீர் தேக்க, மையகங்கு லிருளென்ன வானமெலாம் பரந்
துருமு வழங்கி யார்த்துத், துய்யமுடிச் சையமிசை மதிநிலா
வெள்ளமெனச் சொரிநீர் மாரி, வையமுழு துய்யவரைக் கையெ
னவெள் ளருவிநீர் வழங்கிற் றம்மா. (௨)

வேறு.

அருவி நின்றிழிந் தம்மலைப் பொருளரித் துடன்கொண்
டிரவி யிட்டப்போ லார்த்தினித் தவழ்ந்துமா வெயினர்
தருகு றிஞ்சியும் பாலையு முல்லையுந் தணந்து
மருத மேபுகுந் திறைவர்பல் பதிகளும் வணங்கி. (௩)

வேறு.

கரிய வங்கயற் கண்ணினைக் காட்டிக் காமர் புற்புதங் கனத
னங் காட்டிச், சரிமலர்க்குழற் சைவலங் காட்டித் தனிமு கத்
தெழிற் றாமரை காட்டிப், பரிபு ரத்தொலி துழனிகள் காட்டிப்
பன்ம ணித்திரள் பலமணி காட்டி, விரிதி ரைத்திரள் தாமரை
காட்டி மேவு காவிரி மெல்லியல் செல்லும். (௪)

கரையெலாம்பல நவமணி யிறைத்துக் கையெலாமலர்க்
கனிகளை வகுத்துக், கரையெலாப்புறத் திவலையான் மறைத்துத்
தண்கடற்கரைப் புளினமுங் குறைத்து, வரையெலாப்பெறு
முல்லைசூழ் தெய்வ வளநகர்ப்பிரான் மலர்த்துணைப் பாதந்,
திரையெலாமலர்க் கரமென விறைஞ்சித் தென்றி சைக்கணே
சிறந்தது பொன்னி. (௫)

வேறு.

தடவரைச் சிமய மான தாய்வயிற் சந்தங் கொண்டு
கடமதப் பகட்டின் முத்தங் கையரிக் கொண்டு வாரிக் [ணி
குடதிசை வளங்கொண் டெங்குங் குணதிசை முகத்துப் பொன்
வடதிசை நோக்கி முல்லை வாயிலை வணங்கச் செல்லும். (௬)

மாருதக் கயிறு பூண்டு வருந்திரைப் புரவி பாயக்
காருடை யோத மோதிக் கறங்கொலி முரச மார்ப்ப
வாருதிக் கிறைநீ ராழி மண்டப வீதி தோறும்
பாருடை மரக்க லத்தேர் பற்பல நடக்கு மாதோ. (எ)

செருக்கொளத் தீவின் மீனந் திமிதிமி திமிலஞ் செய்ய
வுருத்தெழத் திமிங்கி லங்க ளுறுசிறு மீன்க ளோட
வெருக்கொளச் சுறவுக் கூட்ட மீனேற்று மகரஞ் சீறி
மரக்கலஞ் சாயப் பாய வளர்ந்தது வாரி யோதை. (அ)

ஆயிர மிப்பி சூழ்ந்த விடம்புரி யலைமொத் துண்ண
வாயிர மிடம்பு ரிக்கொண் டணிவலம் புரிச்சங் கார்ப்ப
வாயிரம் வலம்பு ரிச்சங் கடர்சலஞ் சலங்கள் சூழ
வாயிரஞ் சலஞ்ச லஞ்சூ ழுரிபாஞ்ச சனிய மாமால். (கூ)

வேலையின் சிறப்பும் வேலை மீதெழுங் கதிரு நீண்ட
தாலமுங் கனிகள் வீழுந் தகைமையுஞ் சாற்றுங் காலை
மாலவன் றிகிரி யேவி வருதிற னிருதர்க் கொன்று
நீலவெஞ் சிரங்கள் வீழ்த்தி நின்றிடும் நிலைமை போலாம். (ல)

**வேறு.**

சக்க ரந்தவழ் மீனைப் பரதர்வஞ்
சக்க ரங்கொடு தாமவலை வீசுதல்
சக்க ரத்துயிர் தோறுந் தடவிப்பா
சக்க ரச்சமன் வீசுந் தகையதே. (லக)

**வேறு.**

வரம்புநிறை பட்டினத்து வரும்பரதர் மடந்தையர்க
ளிரும்பனகோட் டுயர்புன்னை யிளமுகைவெண் கழங்கெறிந்து
பெருஞ்சுறவங் குழைகாட்டப் பேருவரி திரைந்தெறிக்கக்
கரும்பனையின் கருக்கெடுத்துக் கலைச்சுரு வகிர்வரால். (லஉ)

**வேறு.**

நத்தொடு தாளந் தூக்கி நறைமலர்ப் புன்னை கப்பூங்
கொத்தொடு தாம நாற்றிக் கொம்பொடு பவளங் கட்டி
முத்தொடு மிப்பி யாடும் பரதர்மா ளிகைமுற் றத்து
வித்தொடும் வினவிற் காய்வ வீசிய வலையு மீனும். (லங)

உவரிதன் றிரைத்திண் காலா லுதைத்தவண் வலையை யோட்டித்
தவழ்வளைக் கோடு ருட்டித் தடங்கரைப் புளினந் தெற்றிப்
பவளமு முத்துந் தூர்த்துப் பரத்தியர் சிற்றின் முற்றச்
சுவடுபோன் றழிப்பச் சீறுந் தாழனிசேர் முல்லை மூதூர். (லச)

வேறு.

செங்குவளை வெண்கமலஞ் செங்கமலங் கருங்குவளை சேர்ந்து கூடிப், பொங்குதிரைப் புனற்றடத்துப் பூம்படாம் போர்த்ததெனப் பொலிந்த காட்சி, சங்குதவழ் முல்லைவனத் தெம்பிரான் றிருநயனந் தம்மி லொன்றாஞ், செங்கதிரை வெண்கதிரைச் செம்பாம்பு கரும்பாம்பு சேர்த லொக்கும். (௧௫)

வேறு

கானகக் கைதை வெள்வாட கைக்கொளக் கடிப்புன் ஞகங்
கானக மெடுத்தோன் மேனி கைக்கொளக் கஞசந் திங்கட்
கானக மனைய மாதர் கண்டன முல்லை வாயிற்
கானகந் திருவம் பாடக் கண்டன முல்லை வாயில். (௧௬)

காமரம் படருங் கீதங் காவிநேர் கண்ணார் பாடக்
காமரம் படருங் கீதங் காவிநேர் கண்ணே பாடுந்
தாமரைத் தாளைத் தேடத் தரையிடந் துழலு மீசன்
தாமரைத் தாளைத் தேடத் தரையிடந் தவனபோற் கேழல். (௧௭)

கோலவெண் கோட்டு முத்தின் கோலவெண் ணிலவார் காவே
நீலமா விருளைச் செய்யு நீணிறக் கிடங்கே யானை
யோலமிட் டலறப் போறகல் லோலமே யுவரி நீர்மோ
தாலமே யெனவி ருண்ட தாலமே பரந்த தெங்கும். (௧௮)

வேறு.

வேதமே வளர்க்குஞ் சைவ வேதிய ரிடமுங் கீத
நாதமே வளர்க்கு நலயாழ் நாடக ரிடமுங் கேள்விப்
போதமே வளர்க்கு ஞானப் பொருளினோ ரிடமுங் கோடா
நீதமே வளர்க்குஞ் செங்கோ னிருபர்வா ழிடமு நீடும். (௧௯)

வேறு

ஆகு திப்புகை யெழுசசியா லகிறபுகைத் திரளான்
மேக லோகமு மொத்தது பேரின்ப விளைவான
மாக லோகமு மொத்தது நவமணி வளத்தா
ஞக லோகமு மொத்தது முல்லைமா நகரம். (௨௰)

வேறு.

கம்பலைப பரிபுரக் காலி னார்நடச
செம்பொனின் மாடமேற் சித்தி ரங்கள்போ
லும்புயத் திருவனா ராடற் காணிய
வும்பர்கா டியர்புகுந் துறைவ தொக்குமே. (௨௧)

வேறு.

கொற்ற வர்க்குமொன் றில்லதந் நகரினிற் கொடுங்கோல்
கற்ற வர்க்குமொன் றில்லது பெரும்பொருட் காத
னற்ற வர்க்குமொன் றில்லது சித்தமெய்ஞ் ஞான
மற்ற வர்க்குமொன் றில்லது வறுமையின் வழக்கம். (௨௨)

வேறு.

பலமடற் குறுமுள் வெண்பூப் பச்சிளந் தாழை மன்றத்
தலம்வருங் குளிர்ப்பூந் தென்ற லளைந்தவர் மறுகிச் செல்ல
விலவிதழ்க் கருங்கட் செவ்வா யிளஞ்சொலார் தோளு மார்பும்
புலம்விடாப் பாதப் போதும்பொருந்தவா டவரைத் தோய்வார்.

கேதகை மடற்பூ வாசங் கிடங்குதோய் நெய்தன் மண்டப்
போதரு புன்னை வேரி பொழில்கொளும் வீதி தோறும்
மாதர்மென் முலையிற் சாந்த மலர்க்குழல் மணங்கள் சூழுஞ்
சீதள முல்லை வாசந் திருக்கோயில் வலமாச் செல்லும். (௨௪)

வேறு.

பொன்ம திற்புனை ஞாயில்சூழ் வாயிலிற் பொலிந்த
தொன்ம திப்பசும் பொன்னெடுங் கோபுரத் தொகுதி
முன்ம தித்திசை நிதியவன் மொய்வகை யிறினும்
பின்ம தித்தயன் சமனுமாய்ப் படைத்தெனப் பிறங்கும். (௨௫)

வேறு.

நிரைதரு பதிக டோறு நீடுசூ ளிகைக டோறும்
வரைதொறுங் கோபு ரத்து வயின்றொறுங் கொடிக ளாடுங்
கரைதருங் கடலிற் றுவுங் கறங்குதெண் டிரையே யன்றித்
தரைதரு மலைக டோறுந் தாவுவெண் டிரையுண் டென்ன. (௨௬)

தினமரு மாலை வேலை மலர்தரச் செய்த லாலும்
வனமுலைப் பெயரி னாலு மானிரு நோக்கத் தாலுஞ்
சனகனுக் கருள்வோன் மேனி தழும்புற வளைக்கை யாலும்
வினவிடைக் கொடியி னாலுங் கவுரிபோல் விளங்கு முல்லை. (௨௭)

நகர்வளச்சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் ௪௧.

## (௩) நைமிசச்சருக்கம்.

முல்லை மாநகர்ப் பெருமையு முல்லைபூ சனைசெ
யெல்லை கார்ணரு மாசிலா மணியரு ளொழிது
மொல்லை யிற்கதி யளித்ததீர்த் தங்களு முணர்ந்தோர்
சொல்ல மண்மிசை விளங்கிய வளஞ்சில சொல்வாம். (௧)

ஆதி தன்கயி லாயமால் வரைபிரிந் தறியா
நீதி கொண்டவேழ் முனிவரு முனிவரு நீர்மைக்
கோதி லாதவ ரருளெண்ணு யிரத்தவர் குழுவுஞ்
சோதி நேமியான் பேரவை யெய்துவான் றுணிந்தார். (௨)

அரவ ணைக்கடற் சேக்கையா னருள்முனிக் கடலை
வரவ ணைந்துளா னெதிர்ந்தனன் பணிந்தனர் வந்தார்
சிரவ ணக்கொடு மஞ்சலி யொடுமவர் சேரல்
சரவ ணத்தன்முன் வானுளோர் சூழ்ந்தவத் தகுதி. (௩)

தனித்த னித்தனிப் படமுனிக் கணத்தவர் தம்பா
வினத்த ராயெழீஇ யாதிவண் சென்றவா றென்றான்
முனித்த வத்துளோர் மகம்புரி நீணெறி முன்னி
நனித்த வம்பெற வேண்டிடம் நல்கென நவின்றார். (௪)

அருப்ப மாயரி யம்புயற குரைப்பவங் கவனோர்
தருப்பை வாங்கியோர் நேமியொன் றுருட்டமுன் சார்ந்த
திருப்பு விக்குளிந் திருப்பிரென் றந்தனன் செப்ப
விருப்பு றும்பதி நைமிசா ரணியமாய் விளங்க. (௫)

மூடுங் கார்முக வண்டுமேற் சூழ்தலான் முகில்வா
னீடுந் தாமத்தாற ளுமத மெலலைநீங் குதலால்
வாடுஞ் சோலையா லகளியங் கடவுள்முன் மகிழ்ந்து
நாடுங் காண்டவ வனமொக்கும் நைமிசா ரணியம். (௬)

மோன மாகுவர் சிலர்சிலர் தருப்பைகள் முடிவர்
தான மீகுவர் சிலர்சிலர் தவம்பர வுவரா
ஞன மாடுவர் சிலர்சிலர் கற்கலை நனைவா
ரான வித்தொழில் முனிவர்வாழ் நைமிசா ரணியம். (௭)

சரியை யுள்ளவர் யோகசா தனையுளோர் தாவாக்
கிரியை செய்பவர் ஞானிகள் மோனிகள் கேள்வி
தெரியும் ஞாதுரு ஞானனு பத்திறந் தெளிந்தோ
ரரிய வேள்வியர் வாழ்வது நைமிசா ரணியம். (௮)

புனித வாவிகள் சமிதைகள் பலர்மலர்ப் பொழில்கள்
கனிகள் காய்களாகல் லடகுகள் தருப்பைகள் கனைவிக்
கினிய வத்திர வியங்கள்சா லிகள்விளை தடங்கள்
றனிவ ளர்ந்திட நல்குமால் நைமிசா ரணியம். (௯)

ஆய நைமிசா ரணியத்தம் முனிவர்சூழ் வந்து
மேய மாதவச் சூதனை வேதியர்க் கெல்லா
நாய கன்றனைப் பணிந்தவ னருள்பெற நாடித்
தூய மேனியன் சவுனக மாமுனி சொல்வான். (௰)

எண்ணி லவருட் சூதனே யிருந்தவக் குன்றே
நண்ணி நீடுமெய்ஞ் ஞானகா ரணஞ்செசால் காவி
னெண்ணில் யாவரு முய்ந்திட மறைப்பொருள் விரிந்து
மண்ணில் யாவரு முய்ந்திடச் சிவகதை வகுத்தோய். (௰௧)

மங்க ளேசர்தம் பெருமையு மந்நகர் வளமு
மங்க ணுற்றிடு புனிததீர்த் தங்களி னடைவு
மெங்க ணும்பெறற் கரியவின் பமுந்தெரிந் திசைத்தோய்
தங்க வாய்மையா லறிஞன முளத்தினுந் தரித்தோம். (௰௨)

அன்று முல்லைமா வனமென வைம்புலப் பகையை
வென்ற நம்மிறை வியாதனு மதன்பெயர் விரித்து
நன்று நன்றென யாமெலாங் கேட்டுள நயப்ப
வென்று மேன்மையா மப்பதிக் கெல்லையு மிசைத்தான். (௰௩)

தவமெ லாம்பயன் பெறவரு டருவது தவத்தோர்
பவமெ லாநதொடைத் திடுவது தடங்கடற பார்பாற்
சிவமு லாவிய பூமியு மானது தீயோ
ரவமெ லாந்தொலைத் தறிவுமே லாக்கிய தவ்வூர். (௰௪)

அளவி லேய்தனக் களடத மாவதந தணர்க்கு
மளவி லாதவப் பரம்பொரு ளாமாயி தில் வாழ்வோர்க்
களவில் செல்வமுந் தருவது சீர்த்தியுந் தருவ
தளவில் வைபவம் யாவையுந் தருவதா மவ்வூர். (௰௫)

என்ன முன்னைநா ளகத்தியன் வதிட்டனே டெழுவ
ரன்ன வத்திரி யின்றுடன் யாவரு மறிய
முன்ன ருங்கலி வியாதனென் றுரைத்ததை முநிவோ
யுன்னி யன்புடன் விரிவிலா மறைதியென் றுரைத்தான். (௰௬)

சவுன கன்சொலக் கேட்டனு மம்மொழி தவறுன்
மவுன நீங்கினன் மகிழ்ச்சியா லோங்கினன் வகுப்பான்
மவுனத் தோரோடு மருளொடும் பொருளொடு மடைவிற்
கவன மாப்பரிக் கதிரெனுஞ் சூதனுங் கலைஞன். (௰௭)

தொல்லை நீர்மைசேர் சவுனக கேட்டியாற் சுருதி
யெல்லை காணியன் முனிவிருங் கேட்குதி ரிசைக்கேன்
முல்லை மாவனத் தமலன்வீற் றிருந்தவம் மூதூர்ச்
சொல்லை யும்பொருட் பயனையுங் கடந்திடு தொகுதி. (௰௮)

வளர வெற்பின்பாற் பிறந்திடுங் காவிரி வடபா
லுளத லங்கள்மெய்ஞ் ஞானபூ மிகளவற் றுறைந்தோர்
கிளர மூழ்கினோர் புனலுடற் கொள்பவர் கிளையோ
டளவி லாப்பரப் பிரமத்திற் காணிபெற் றடைவார். (௰௯)

வேறு.

காவிரிநீர் குடகத்து வேதன்மகம் புரியுங்
கனற்குண்ட தீர்த்தமாங் கடவுளகத் தீசர்
மேவுமதன் கீழ்பாலின் மேனோக்குந் தரமாம்
வியன்றீர்த்த மதன்கீழ்பாற் கனகமெனுந் தீர்த்தந்
தாவிலா வதன்கீழ்பா லெய்ப்பில்லாத் திரைசூழ்
சையமா மலகமெனச் சாற்றுமிரு தீர்த்த
மாவியென விசையந்தி காவிரிசங் கமமா
யணையுமிட மரியதலம் வினையனைத்து மகற்றும். (௨௰)

செழுங்கயிலை யெனுநதிதென் காவிரியா நதியாந்
தீர்த்தத்தென் கீட்டிசையிற் றிகழீங்கோய் மலையிற்
றொழுமமரர்க் கருளுதவுஞ் சோதியவர் கீழ்பாற்
றுகளறுசிந் தாமணியாந் தீர்த்தத்தென் றூய
விழுமமுறு தாயுமாம் விமலர்வட கரையின்
மிக்கதிரு வானைக்கா வியனுவ லீசர்
பழம்பதிவைத் தியநாதம் கீட்டிசையன் பிலாலந்
துறைப்பதிக்கீழ் மழபாடி வைத்தியர்தம் பதியே. (௨௧)

போற்றியவப் பதிதென்கீட் டிசைதனிலை யாறு
புகழ்தருகை லாசகிரி தரிசனந்த தருளிச்
சாற்றுதமிழ்த் திருநாவுக் கரசினையாட் கொளுமா
தலமதன்பூ ருவதிசையிற் றூரகமெய்ப் பொருளா
யேற்றமிகு சிவகுருநா யகன்மறைகள் பாவ
வினிதமரு மலையதன்கீ ழெழிற்குடமூக் கமலன்
காற்றுறுநற் றிசையதனி லோண்ட முனிக்கோன்
கருத்திருக் கொட்டைநகர் கவினதன்பூர் வத்தே. (௨௨)

கணபதிமங் கலமுறநற் பூசனைகள் புரியுந்
　　தண்ணுறுதன் மங்கலப்பரமர் திருநகரப் பதியின்
குணதிசையிற் கற்பகத்தா யுமையோடக் கினீசர்
　　குலவுமெழிற் கஞ்சனூ ரப்பதியின் கீழ்பா
லிணையிலகத் தியமுனிக்குத் திரிகோடி யுருவ
　　மெந்தையரன் காட்டவக மகிழ்ந்துடனம் முனிவன்
மணமலர்கொ டருசசிக்கும் பெரும்பதியப் பதிக்கு
　　வடகுணபா லிருக்குமொரு வளம்பதிசாற றுதுமே. (உ௩)

அரியதவ மியற்றவெம திறைவர்தரு வரத்தா
　　லாயிரத்தெட் டண்டமுமு தரசுபுரி சூரன்
பெருவலியா லமரர்களைப் பெருந்துன்ப மாற்றிப்
　　பீடுளவெவ கோனடத்திப் பெற்றியிறு நாளி
லொருவியொளித் திடுமமர ரேவுதலின் மார
　　னெளிநதுமலர்க் கணைவிடுப்ப வுடலெரிய விழிக்கும்
பாமனது திருக்கொறுக்கை யெனவுரைவீ ரட்டப்
　　பழம்பதியப் பதிவடகீழ் பாற்பதியொன் றுளதால். (உ௪)

ஆதித்த நகரெனவாங் கருப்பறிய லூரி
　　னுங்குற்றம் பொறுத்தருளு மாதியமர் தருமக்
கோதில்வட குடபாலிற் கலைசசிபுரி யன்பிற்
　　குனிநதுகலை யர்க்குவிமிர்ந தருளுமிறை வைகும்
வேதமுறை திருப்பனைதா லப்பதியின கீழ்பால்
　　விமலர்பசு பதியீச ரமர்நதருளு மாங்கே
சோதியுமை பநதணநல லூரெனவா கமநூல்
　　சொலலியநற் பதியதறகுத் தொகுத்தகுண வடக்கே (உ௫)

வானவர்மா முனிவரரும் வணங்கிமகிழ்ந தேத்தும்
　　மதிமவுலி யொருபங்கின் மலைமகளுக் கினிய
மோனபர ஞானமறை முடிவையுரைத் தருளு
　　முழுமுதலவை கியதிருவோ மாம்புலியூர் மருங்கி
லீனமிலீ சானத்தின் பிரமபுர மாகு
　　மிதன்கீழ்பாற குருகாவூ ரிறைவர்பதிக் கிப்பாற
றேனமரு மலர்சசோலை நவதீர்த்த முளதாந்
　　திகழுமுல்லை வனநாதர் செழும்பதியீ தாமே. (உ௬)

வேறு.

இன்ன மெண்ணிலாத் தலமுள பரமன்வா மெழலலை
யன்ன வித்தலங் கட்கெலாஞ சிறப்புடைத் தாகும்
பொன்னி மாநதி யெல்லையி லிருநதவன் புகழை
யின்ன சொல்லுகே னவனரு ளாற்சிறி திசைக்கேன். (உ௭)

ஆதி யந்தமி லாதவ னணிகொண்ட கோதை
பாதி கொண்டமெய்ப் பங்குகொண் டிருந்தருள் பரம
னாதி யந்தணன் முல்லையந் தழும்புடைத் தலைவன்
சோதி யெம்பிரா னிருந்தன னருந்தவர் துதிப்ப. (௨௮)

ஐய னாலயத் தகிலமா திசையினி லங்கண்
கையி ராயிரம் வதனமோ ராயிரங் காந்து
செய்ய வார்சடை முடிமிசை யிருந்துவாழ் திறம்போல்
வைய முய்யவோர் கூபத்திற் கங்கையாள் வாழும். (௨௯)

செங்க ணயக னாலயத் தங்கிமா திசையிற்
பங்க யாசன னிரு கையினாற் பயின்ற
துங்க வேள்வியின் விதியெலாம் புவியெலாந் துதிப்ப
மங்கை பங்கனு நாட்டுவான் பிரமமா தீர்த்தம். (௩௰)

பண்ணு லாமொழி யுமையவள் பங்குறை முல்லை
யண்ண லாலய முன்னரப் பொன்னியி லணித்தாய்
மண்ணில் யாவர்க்கும் வான்பதத் தெவர்க்குமற் றெவர்க்குந்
தெண்ணி லாவெழுந் தெனப்பெறுஞ் சந்திர தீர்த்தம். (௩௧)

பொன்னி மாநதி போன்றது புராதனக் காசி
தன்னி னன்னதி யொத்தது குறுமுனி தாங்குங்
கன்னி வானதி யானது கறைமிடற் றிறைவன்
சென்னி மேனதி திகழ்ந்தது சந்திர தீர்த்தம். (௩௨)

கன்ம சஞ்சிதங் களையெலாங் களைந்திடுங் காணிற்
றொன்மை யாணவ மலத்தையும் புலர்த்திடுந் தோயில்
வன்ம வெம்பிணி யகற்றிடு முட்கொளின் மாறுச்
சென்ம நோயையு மாற்றிடுஞ் சந்திர தீர்த்தம். (௩௩)

திரைவ ழங்கினு நுரைபெறுச் சந்திர தீர்த்தக்
கரையி னிற்சிவ லிங்கமொன் றுளதுதண் கயிலைப்
பரைப ரம்பொரு ளுடனும்வீற் றிருந்திடும் பத்த
ருரைக டந்தபே ருலகநா யகரென வோத. (௩௪)

ஓது மவ்விலிங் கந்தனை யிடைவிடா துவந்து
போது மூன்றினு மருச்சனை புரிந்துமுன் போற்றித்
தீது தீர்த்திடும் தேவரு முனிவர்தந் திரளு
மாது பாகன்றன் பணிபுரிந் தவ்விடை வசிப்பார். (௩௫)

## வேறு.

கார்த்திகைத் திங்க டன்னிற் கருதரு திங்க டன்னிற்
சாத்திர முறைமை தன்னிற் சந்திர தீர்த்தந் தன்னி
லேத்தியே மூழ்கி னோரில் வாழ்வினிற் குபேர னவர்
நீத்திடுந் துறவோ ராய்மே னிமலனார் பதத்தைச் சேர்வார் (௩௬)

செஞ்சடை முல்லை நாதன் றிருக்கோயிற் றென்கீழ்ப் பாலா
மெஞ்சலில் முனிவர் வாச மெண்ணிலாக் கதிகள் பெற்றோ
ரஞ்செழுத் துருவோ ரொன்றே யாயிரங் கோடி யாகுஞ்
சஞ்சிதப் பகையா காசத் தானமென் றதற்கு நாமம். (௩௭)

## வேறு.

சந்திரவி னடந்தபிரான் றிருமுல்லை வனப்பதியிற் றனது பேராற், சந்திரதீர்த் தம்மெனவோர் தீர்த்தம்வகுத் தப்புனலிற் றாழ்ந்து தோய்ந்து, சந்திரிகை மேனியிரச் சடரோக மேறிவ ருஞ் சாபந் தீரத், சந்திரன்முன் னெடுங்காலந் தவம்புரிந்து சுரா ரேத்துந் தகுதி பெற்றான். (௩௮)

மாயிருஞா லப்பரப்பின் மலைனைத்துங் கொணர்ந்துமுல்லை வனந்தா னன்பா, லாயிரநா மமும்பரவி யாயிரத்துப் பத்துமல ரர்ச்சித் தேத்திப், பாயிரவி படரொளிபோற் பயில்கயிலைப் பரமனிருக் கையின் பாங்க, ரேயிருந்தான் சடாயுமுனி சிவார்ச் சனை பலப்பெருமை யியம்பற் பாற்றோ. (௩௯)

சுந்தரனென் றொருநிருபன் வெண்குட்டந் தொலைந்தறவுந் தூய்மை யாகச், சந்திரதீர்த் தப்படிந்து தருணவுருக் கொண் டெழுந்தான் றாவா விஞ்சைக், கந்திருவர் மாகதியூர் சேர்ந்துமா கதியனைத்துங் கைக்கொண் டாரா, லிந்திரனார் விண்ணுள்ளோ ரெண்ணிலா ரிறைஞ்சியரு ணண்ணி னாரே. (௪௰)

தனுகரண புவனபோ கத்தளையான் மும்மலமுஞ் சலிப்ப வேங்கி, நினைவரிய தோற்றத்தி லிறந்துபிறந் துழலுமுயிர் நிலை கட் கெல்லா, மனவாத மருள்பொழியுந் திருவுருக்கொண் டிமையவல்லி யநுசந் தான, மினிதிருந்து விளையாடு மாடரங்கு முல்லைவன மென்று கண்டாய். (௪௧)

விண்விளங்க மிளிருமைஞ்ஞூற் றிரட்டிகடுங் கதிர்க்கிரணம் விரித்துக் காட்டி, மண்விளங்க விருடுரந்து வரும்பகலோன் றிரு முல்லை வனத்தான் றாளைப், பண்விளங்க விசைபாடிப் பனிமலர் கொண் டினிதிறைஞ்சிப் பரமன் மேனிக், கண்விளங்குங் காட்சி யினால் மாட்சியவ னருள்சாட்சி கைக்கொண் டானால். (௪௨)

ஒருமையின்ஞா ரிருவரொடு முப்பொழுது நான்மறையஞ்
செழுத்து மோதித், திருமுகமா றுடையவே ளுலகேழுந் திசை
யெட்டுந் திருத்தோள் வேய்ந்த, வுருமணியோன் பதுமொளிரப்
பத்தியொடு முருத்திரர்பன் னொருவர் போற்றும், பொருளை
முல்லை மாபதியிற் பன்னிருகைத் தாமரையாற் பூசித் தானால். ()

கடதடக்கிம் புரிக்கோட்டுக் கரடகம்பக் களிற்றுமுகக்
கடவுள் கண்டு, தடமலர்கொண் டினிதிறைஞ்சி வழிபடுதற்
கிசைந்ததுமித் தலமே சைல, மடவரலோர் பங்குடையான்
றனையங்கா ரகன்பண்ணுள் வணங்கி யேத்திப், படவரவஞ் சிரத்
தேந்து பார்முழுதுந் தானரசு பரித்தா னன்றே. (௪௪)

அகலிகைசா பந்தீர்த்த வவதாரந் தனிநெடுமா லருச்சித்
தேத்திப், புகலுமுனி சபித்ததெய்வ மகளொருத்தி கல்லுருவப்
புரையுந் தீர, விகல்விளைத்த விலங்கையர்கோ னேனையரை யடு
பழியி னிடும்பை தீரத், தகவுரைத்த சடாயுமுனிக் குதவியே
யித்தலத்திற் றவஞ்செய் தானால். (௪௫)

தேன்முகத்துச் செழுங்கமலத் திருமலர்ச்சிங் காதனத்திற்
சிறந்து வாழு, நான்முகத்துப் பெருங்கடவு ளீடாறு மிக
வேள்வி நடத்தி வேத, நான்முகத்து முறைவழுவா தியற்றி
யும்பர் வாழ்ந்திருந்து நூற்றுன் போற்ற, வான்முகக்கைத்தொடு
மதில்சூழ் முல்லைவனத் தான்றனை வணங்கி னானே. (௪௬)

வேறு.

கைப்பொருள் கவர்தல் பொல்லாக் கள்ளுணல் பிரம கத்தி
மெய்ப்படு மாசா னில்லை விரும்பலின் கிவரைக் கூட
விப்பரி சுரைத்த பஞ்ச பாதகத் திடரு நீக்குஞ்
செப்பரு முல்லை வாயிற் சிறந்துள பஞ்ச தீர்த்தம். (௪௭)

சீகரந் தரளம் வீசுஞ் சிறந்தகா விரியின் மூழ்கி
மாகமா மகத்தி லம்மா வாசியி லுச்சிப் போதி
லேகநா யகனை முல்லைக் கிறைவனை யிறைஞ்சு மன்பர்
போகபூ மிக்கும் வேலைப் பூமிக்கு மரச ராவர். (௪௬)

கங்கைவான் பொன்னி மூழ்கிக் கடும்பகல் முல்லை மூதூர்
மங்கையோர் பாகங் கொண்ட வள்ளலை வணங்கி னோர்கள்
சங்கையில் காள கண்டஞ் சதுர்ப்புய முக்க ணேடுஞ்
செங்கைமான் மழுவுந் தோன்றச் சாரூபம் பெறுவர் திண்ணம். ()

வேறு.

வனிதை பங்கொடுந் திருமுல்லை வனத்திில்வாழ் வள்ள
லினிதி னொருமவ் வெல்லைக்குத் தென்றிசை யிலங்கத்
தனியெ ழுஞ்சுட ரருட்குரு மூர்த்தமே தரித்து
முனிவ ரின்புற விருந்தது தக்கண மூர்த்தம். (௫௦)

நாடி முத்தனுத் தக்கண மூர்த்திசந் நிதியைத்
தேடி முத்திசே ரஞ்செழுத் திடையினிற் செபித்தால்
வீடி ருந்திடு நிச்சய மேகுரு விளம்பக்
கோடி லக்கமு மிக்கதோ ருருப்பலன் கொடுக்கும். (௫௧)

தந்தை செல்கதி யடைந்திடத் தந்தைமெய் யங்க
மெந்தை முல்லைமு தூரினின் மகவுகொண் டேகி
வந்த வெல்லையில் மணஞ்செய்பொன் மலரென மலர்ந்தா
லந்த வெல்லையின் பெருமையா ரறிபவ ரறிவோய். (௫௨)

வேறு.

திரிசங்கு மன்னன் முன்னஞ் செப்பிய சாபந் தன்னிற்
பரிசங்குத் தொடர முல்லைப் பதியில்வந் தணுகத் தூய்மை
புரிசங்கப் பொன்னி யாடிப் போதுமுன் றினுமுன் போற்றிச்
சுரிசங்கப் படையான் காணச் சோதிதன் னருளை கொண்டான்.

வேறு.

முருந்து முல்லையு மொத்தகூ ரெயிற்றுமை முதல்வன்
குருந்து நீழலான் முல்லையம் பதியில்வாழ் கோமான்
றிருந்து மேனியைக் கண்ணினாற் றெரிசிக்கச் சிலநாள்
வருந்திச் செய்தவத் தோர்க்கன்றி யாவர்க்கு வருமே. (௫௪)

கிளர்த்து மாதவச் சவுனக ளாதியீர் கேளீர்
துளக்க மற்றவிச் சரிதையை விளம்பலாற் றூயே
னளப்ப ருந்தவஞ் செய்தன னீங்களன் பாக
வுளத்திற் கேட்டதுந் தவப்பல னெமென வுரைத்தான். (௫௫)

நைமிசச்சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் ௯௯.

—✻✻—

## (௪) அங்கம் இரத்தினமான சருக்கம்.

தொகைப்பட வுரைத்த மூதூர்த் தொல்லைமாக் கதைக டம்மிற்
புகைத்தடம் பூத்த வென்பு புனைமணி பூத்த வென்றாய்
பகைத்தவைம் புலனை வென்றோர் பரவுமற் புதனே யெம்பால்
வகைப்பட விரித்தே யந்த வாறெலா முரைத்தி யென்றான். (௧)

இன்னுமாக் காதை தம்மு ளென்புசே ரியல்பை யெல்லாம்
பன்னுவா யடைவி லென்று சவுனகன் பகரக் கேளா
வுன்னுதற் கரிய வின்ப வுணர்ச்சியா னுலகு வாழ
மன்னுமன் பெழுந்த சூத மாமுனி வகுப்ப தானான். (௨)

வேறு.

தென்மலைப்பிரான் செந்தமிழ் மாமலைத் தென்றல்
சின்ம யப்பொரு ளறுபத்து நான்குசீ ராடல்
மன்ம கிழ்ச்சிசெய் சங்கமே வண்டமிழ் வளர்ச்சி
நன்மலைப்பொழில் சூழ்வன பாண்டிநன் னாடு. (௩)

பைந்த மிழ்த்துறைப் பாண்டியன் பாண்டிநன் னாட்டி
லந்த ணர்க்கெலா முதியவ னறுதொழி லாளன்
செந்த ழல்பொலி வேள்வியிற் றாழ்விலாச் செல்வன்
பந்த முற்றவெம் பவத்தையுந் தவத்தினாற் படுத்தோன். (௪)

சாதி மேன்மையான் றருமசீ லத்தினன் றரணி
வேதி யர்க்கெலா முபநிட தப்பொருள் விரிப்போ
னோதி யாவையு முணர்ந்தவ னோதாது முணர்ந்தோன்
பேதி யாவருட் சுசாவியென் றுரைத்திடும் பெயரோன். (௫)

சுசாவி யென்பவன் சுருதியு மிருதியின் றொகையு
முசாவி யந்நிலை யொழுக்கமும் விடாமலே யுணர்ந்தெண்
டிசாமு கத்தினு மெண்ணில்மா ணாக்கரைச் சேர்ந்தான்
விசால மாம்பொரு ளுண்மறை நூன்முறை விரித்தான். (௬)

இந்த வந்தணன் தவம்பெறு மைந்தர்க ளெண்ம
ரந்த மைந்தர்க்குச் செயுங்கட னனைத்தையு மடைவின்
முந்த நான்மறை நூன்முறைச் சடங்கொடு முடித்தான்
செந்த ழற்றொழி லுதவினா னெண்மருந் தெளிய. (௭)

அனைய மைந்தர்க ளெண்மருஞ் செல்வமோ டகத்திற்
புனையும் வேள்விகள் வீற்றுவீற் றாகவே புரிந்தார்
நினைவ ருங்குல வொழுக்கமும் வணக்கமு நிறைந்தா
ரினையர் தந்தைதா யிடத்தினில் வழிபடற் கிசைந்தார். (௮)

இந்ந லத்தினு ளெண்மரும் பெரியரே யிவர்க்குண்
முன்ன வன்பெயர் வாமதே வன்றவ முதிர்ந்தோ
னின்ன வர்க்குளு மிவன்மீது பீடுளோன் றந்தை
சொன்ன சொற்றவ றுவகை வழிபடுந் தொழிலோன். (௯)

தூய நற்றொழின் மைந்தர்மா ணாக்கருஞ் சூழ
நேய முற்றனன் செயுந்தவ நீத்திலா னெடுநா
ளாயி ரம்பிறை தொழுதவ னிருந்தன னப்பான்
மாய மெய்த்தனு வொழிந்தருட் டனுக்கொடு மறைந்தான். (௰)

பெற்ற தந்தையுஞ் செல்கதி யடைந்தனன் பின்னர்
மற்ற மைந்தரில் வாமதே வனுமன மயங்கிச்
சுற்ற முந்துணைத் தம்பிய ரும்புடை சூழச்
செற்ற தீங்கில னுனுமறைச் சடங்கெலாஞ் செய்தான். (௰க)

வேத வாய்மையின் மற்றைநாள் விதித்தது முடித்தா
னேத மில்கடத் தென்பொலா மன்பினு லெடுத்து
மாத லங்களில் வைப்பதே கடனென வந்தா
னாத லாற்பெறும் புதல்வர்செய் கடனிது வன்றே. (௰உ)

## வேறு.

கும்பத் தினிலென் புசுமந் தொருவன் கொடுமுன் வருமுன்
வருவான் முனிவோ, ரும்பர்க் கிணையென் றதவம் புரிவோ னொரு
வன் பலதன் கிளையுஞ் செலவே, யிம்பர்க் குளருந் தலமெங் கணு
நா மினியே குவதே கடனா மெனவே, செம்பொற் கமலந் தரு
தண் புனல்சேர் திருமா மதுரைப் புரமே வினனால் (௰ங)

வைகைத் திருமா நதியா டியதின் மறிபிண் டமுமங் கிடுவா
னதன்மேற், பொய்கைக் கரையிற் றாளந் திகழும் பொற்றா மரை
மூழ் கிமிகுங் கடனே, செய்தற் கிசைவான் மறையின் படியே
திலதர்ப் பணமங் கடைவிற் செய்தபின், பையத் தருமா முனிநா
யகனும் பாரத் துவசன் பதநண் ணினனால் (௰ச)

கண்டன் பொடுசென் றுவணங் கியபின் கனிவா முனிவோ ரினிதா மருளே, யுண்டென் றுமகிழ்ந் திறைவன் பதிமீ தொரு நா ளிருநா ளுறைவா னருண்மேற், கொண்டென் பொடுசென் றிடுவான் மனனங் குலவந் தணரோ டியர்கா விரிவாய், மண்டுங் கயிலா யமிறைஞ் சியபின் வாழ்சம் புவனப் பதிவை கினனால். ()

தங்குஞ் சிவலிங் கமிறைஞ் சிவரந் தருசூ ரியபுட் கரணித் தலமும், பங்கந் தவிர்பஞ் சநதிப் பதியும் பகர்மா யூரப் பதியுந் தங்குந், துங்கம் விளைநற் புன்கூர் வேளூர் சொல்லணி காழிப் பின்குரு காவூ, ரங்கந் கிலுமங் கமொடுந் திரியா வவன் முல் லையரும் பதிகண் டனனால். (௰௬)

பலசூ ளிகையும் பயில்மா ளிகையும் பணிமே டைகளும் பகர்சா ளரமுந், தலவா சமுறுந் தவவே தியருந் தவஞா னிய ருந் தகவா மிடமுஞ், சிலதோ ரணமுந் திரள்வீ திகளுஞ் சில சோ லைகளுந் திகழ்சா லைகளும், புலவோ ரிடமும் புலவோ ரிட மும் புனைமுல் லைவனந் தனிலெய் தினனால். (௰௭)

வேறு.

மோகசா லங்கடந்து முனிவிழந்த முனிவோர்கள் முடிவி லாத, யாகசா லையுந்தேவ ரியாவருக்கு மவியுதவ யாண்டு மின் னும், பாகசா லையுந்தவத்தோர் பன்னகசா லையுமுதிராப் பாலன் வாழும், ஏகசா லையும்புவியி லிந்திரஞா லமும்போலு மினைய கண்டான். (௰௮)

இளமைமா றுவண்ண லென்றுமழி யாதபிரா னிறைவ னன்பாற், களமைமா றுவுருவக் காலனர சழித்தருளுங் கடவுள் மேன்மை, யுளமைமா றுப்பெருமை யரன்முல்லை வனத்தோர் பால் மேலைப் பாலை, வளமைமா றுத்தவஞ்செய் மார்க்கண்ட ளுச் சிரம மருங்கு சேர்ந்தான். (௰௯)

வெண்ணிலவு பொழிந்ததென்ன வெண்ணீறு திமிர்ந்ததிரு மேனி தோன்ற, வெண்ணிலக்க வடமாலை காஞ்சிரமார் பிலங்க முன்றா விலங்க நீங்காப், புண்ணியன்சீ ரஞ்செழுத்து நெஞ்சழுத் திச் சிவயோக போகத் தோடு, நண்ணியஞா னுனந்த மார்க்கண் டன் றவசிருந்த நலனுங் கண்டான். (௨௰)

சயிலமென்ன வினிதிருந்த தவராசன் முன்றனது தந்தை யங்கம், பயிலுமொரு குடத்தைவைத்துப் பற்பலகாற் பணிந்தெ ழுந்து பரவா நின்றான், கயிலைமலைப் பொருளருள்சேர் கவுணி யர்கோன் புகழ்க்காழிக் கடவுள் முன்னர், மயிலையிலோர் வணி கன்மக ளங்கமிடு கடத்தைவைத்து வணங்கல் போல. (௨௧)

வேறு.

ஆண்டகை யவனைக் காணு வருந்தவ நீயா ரென்னப்
பாண்டிய தேச வாசி வேதியன் மிருதிப் பண்பன்
காண்டகு சுசாவி செல்வக் காதலன் வாம னப்பேர்
பூண்டனன் விரத மொன்று புண்ணிய மூர்த்தி கேண்மோ. (௨௨)

முந்தமா தவனென் றாதை முடிவுற்று ளவன்மெய் யங்க
மந்தமி லேண்கொண் டேகி யருண்மறைக் கடன்க ளாற்றி
யெந்தையே யிவனுஞ் சேர்ந்தே னின்றன னினைய செய்துந்
தந்தையின் குறையுந் தீர்ந்து தமியனுந் தெளிந்த தில்லேன். ( )

தலந்தொறுஞ் சென்று சென்று தலைப்படாத் தலமோ வில்லை
நிலந்தொறும் பிண்ட மேந்தி நின்றிடா நிலனு மில்லை
சலந்தொறும் தருப்பை யெள்ளாற் றருப்பியாச் சலமோ வில்லைக்
குலந்தொறு முய்ய யான்செய் குறையின்ன முடிந்த தின்றே ()

என்செய்வ திதன்மே லங்க மிருத்திடு மிடமியா தென்ன
நன்செய்தி மிருகண் டுய்யு நற்றவக் குமரன் கேளா
முன்செயுந் தவத்தா லன்றே முல்லைமா நகரஞ் சேர்ந்தா
யென்செயுங் கடனு முண்டோ பேதைநீ கேண்மோ வென்றான்.

பெற்றவர் பெறும்பே றீதே பிள்ளையாம் பலனு நீயே
நற்றவ மிதன்மே லின்றே நம்பிநீ தலங்க டோறு
மிற்றையுஞ் செயுந்த வத்தா லித்தலஞ் சேர்ந்தா யென்றான்
மற்றவன் றெளியு மாறு மனக்குறை தீர்க்க வல்லான். (௨௬)

வேறு.

எத்தலமு மிணையொவ்வா தனுதியிற்றோன் றியதுவிண்
ணோ ரெண்ணி லோர்கள், முத்திபடைத் ததுநெடுமால் முல்லை
நா யகன்றிருத்தாண் முளரி யேத்திப், பத்திசெயப் பெற்றது
நின் பாக்கியத்தாற் றந்தைதவப் பயனு லங்க, மித்தலத்தி லெய்த
முத்தி யெய்தியது மாமென்றா னின்னுஞ் சொல்வான். (௨௭)

சுந்தரன்மால் மும்மூன்றாந் தோற்றத்தி லசோதைதாய்
துயருற் றேங்க, நந்தர்கோன் பரகதியை நாடியநா ளவன்றனக்கு
நன்மை செய்வா, னிந்தமுல்லைத் தலத்தினவ னங்கமுங்கொண்
டேகினனிவ் வெல்லைக்கண்ணே, வந்தளவி னவமணியா மலர்ந்து
மணம் பொலிந்ததந்த வள்ள லங்கம். (௨௮)

முல்லையர்கோன் றிருவருளால் முல்லையர்கோன் றனக்குச்
செய் முறைமை யாலே, தொல்லையுல குண்டபிரான் வஞ்சனைக்
கஞ் சனைத்தடிந்த தூயோன் றுனிவ், வெல்லையின்வந் துளசடங்
கு முடித்துப்பா டாணமுநீ ரிட்ட வன்றே, யொல்லையினி
னந்தர்கோன் பரபதத்தில் வீற்றிருந்தா னும்பர் போற்ற. (உகூ)

ஆதலாற் காவிரியிற் றோய்ந்துவட திசையினக ரருகிற்
கஞ்சப், போதலரும் நந்தகோ பாலதீர்த் தத்திலங்கம் போக்கிப்
பின்னர்க், கேதமாஞ் சென்னிதனிற் கேசமுமாற் றிடமுன்னோர்
கிளைக ளெல்லா, நாதர்பா தக்கமல வீடடையுஞ் சரதமிது நடத்
தா யென்றான். (ஙo)

இப்பரிசு பெருமறலி யதிகாரங் கடந்தபிரா னியம்பக் கே
ளா, வொப்பரிய வுவகையொடும் பணிந்தெழுந்து விடைகொண்
டா னுலவாப் பொன்னி, மெய்ப்புனலுண் மூழ்கியபின் னந்த
கோ பாலர்செய்த வியன்றீர்த் தத்தைக், கைப்பொருளாய்க் கொ
ண்டுசும்பத் தங்கமும்வைத் தப்புனலாற் கடனுஞ் செய்தான். ()

தீர்த்தவிசே டந்துதித்துப் படிந்தெழுந்து குறையனைத்துந்
தீர்த்தா னங்கம், பார்த்தளவி லிரத்தினப்பூம் பனிமலராய்ப் பரி
மளிக்கப் பட்ட தம்மா, சீர்த்திகொளவ் வூர்த்திறமுந் தெரிந்
திலார் கடன்மலையுந் தேடிச் சேர்த்துக், கோத்துமணி கழுவி
யிழைத் தொப்பமிட்டுக் குயிற்றிவிலை கூறு மாந்தர். (ஙஉ)

சுமைக்குடத்து ளென்பனைத்துந் தோன்றலுக்கு நவமணி
யாய்த் தோன்றுந் தோற்ற, மிமையமலைப் பெண்ணணங்கை
மணஞ்செயுநா ளவளணங்கி னெழிலுக் கொக்க, வமையுமொரு
மணவாளக் கோலமுஞ்சே ரெம்பிரா னணியென் பெல்லாஞ்,
சிமையமன்னன் முதலியர்க்கு நவமணிப்பூ ணெனவிளங்குந்
திறமை போலாம். (ஙங)

என்பணியென் பணிகொளலா லென்புமணி மலராகச் செய்
த வாறே, தன்பதிமுல் லைத்தலத்தின் மேன்மையோ தீர்த்தத்
தின் றன்மை தானோ, முன்புசொலக் கேட்டதுண்டோ பின்புல
கிற் காண்பதுண்டோ மொழிவ தென்னே, யன்புருவான் திரு
வருளை யறிகிற்பா ரியாவரென வதிச யித்தான். (ஙச)

பிறந்தவர்க்கு ளின்னுமின்னும் பிறப்பவர்க்குட் பிறவாமை
பெறுதற் கியாவுந், துறந்தவர்க்கு ளென்போலுந் தவம்பயின்றா
ருளரென்றுஞ் சொல்லற் பாற்றே, விறந்தகற்பங் கடந்திறவா
திருந்தவர்க்குங் கைம்மாறே தெனச்சொல் கென்பா, னறந்த
ழைக்கு முல்லைவனத் தவன்பெருமை யுவனல்லா லறிவார் யாரே.

எனப்பரவி யெம்பிரா னாலயத்துட் சென்றுபணிந் தெழு
ந்து போற்றி, யளப்பரியான் காண்பரிதா யசஞ்சலமா யகண்டி
தமா யனாதி யாகி, நினைப்பரிதாய் முல்லையின்கீழ் நிறைந்தபர மா
னந்த நிதியைக் கண்டான், மனப்பதியிற் றிருவடித்தா மரை
சேர்த்தா னுரையுணர்வு மறந்து நின்றான். (௩௬)

கருவேறு கண்ணிதனிற் சிக்காது தடுத்தாண்ட கனியே
போற்றி, திருவேறு கண்ணிடந்த சினவிடைமேற் பவனிவருந்
தேவே போற்றி, மருவேறு கண்ணிதிகழ் மவுலிபுனை மாசிலா
மணியே போற்றி, யுருவேறு கண்ணிபங்கா வழகேறு நீறாயெம்
முயிரே போற்றி. (௩௭)

பிறைமுடிக்குஞ் சடைமௌலிப் பெம்மானே யெம்மானே
பேசற் கொண்ணா, மறைமுடிக்கும் பெரும்பொருளே மாசிலா
மணியேயென் வாழ்வே நெஞ்சிற், குறைமுடிக்குந் திருவுருவே
யெனத்துதித்தான் குணலைநடங் குனித்தான் கையால், நறை
முடிக்கு மலர்தூவி மெய்விழியா னந்தவெள்ள நனைப்ப நின்றான்.

முப்போதும் பணிந்தெழுந்து நான்மறையு மஞ்செழுத்து
முறையி லோதிக், கைப்போது கொடுவழிபட் டகம்புரியா மகம்
புரியுங் கருத்த னாகி, மெய்ப்போதங் கீழ்ப்படநற் சிவபோத
மேலிடவே விழைந்து நெஞ்சி, லெப்போது முல்லைவனத் திறை
யருளே துணையாக்கொண் டிறைஞ்சிப் போற்றி. (௩௯)

வேறு.

குலவல்லி மணஞ்சேர் முல்லைக் கொடிக்கழும் புடையான்
கோயில், குலவல்லி மணஞ்சேர் முல்லைக் கொடியொடும் வழிபட்
டேத்தி, நிலவெல்லை யகல்வா னன்றி நெறியெய்திக் காட்டு
வான்போல், நிலவெல்லை யகல்வா னன்றி நெறியெய்திக் கயிலை
சேர்ந்தான். (௪௰)

வேறு.

பத்தியொடுந் தந்தைதாய் தங்கிளைகள் பரிசனங்கள் பல்
லோர் மெய்ப்பி, லத்தியெனி னுங்கேச மெனினுமுகி ரெனினு
மவ்வூ ரடையு மாகில், முத்திதரு முல்லைவனப் புனலிலங்க மிடுவ
மென்று முன்னி னாலுஞ், சித்திதரும் வழிநடப்போ ரோர்
தினமந் நகர்பெறினுந் தேவ ராவர். (௪௧)

இரவுபக லனுதினமு மெல்லைபிரி யாதுபணிந் திறைஞ்சி யேத்தி, வரதனருள் வாழ்த்தினர்க்கு மவ்வெல்லை தனிற்பிறந்து வளர்ந்தோ ருக்கும், பரவுமந்தப் புனல்படிந்த பத்தருக்கு முத்தி தரும் பரமன் வாய்மை, சரதமிது சரதமிது சத்தியஞ்சத் திய மென்றான் தவத்தான் மிக்கோன். (சஉ)

அங்கமிரத்தினமானசருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம். கஙஅ.

—⁂—

## (ரு) பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்திபெற்ற சருக்கம்.

என்பு மாமணி யாயவா றியம்பினே யிறைவர்
பின்பு பார்ப்பதி யருந்தவம் புரிந்திடும் பெருமை
யன்பு மேற்படச் செவிப்புல மினிதுற வடியேன்
றன்பு கீழ்ப்பட நவிற்றெனச் சூதனுஞ் சொல்வான். (க)

ஓங்கி நின்றமா லுறக்கமே சுமந்திடு முரக
நீங்கி நின்றரன் பாலணைந் தானென நினையாப்
பாங்கி னின்றமா திறைவனைப் பாற்கடல் மலையாய்த்
தாங்கி நின்றது போலுமாங் கயிலையஞ் சயிலம். (உ)

பூணு மென்பணித் தவளவெண் ணீற்றொளி புரளக்
காணு மாயிர முகத்துட னரியயன் காணாச்
சேணு லாவிய வடிவமாய்ச் செஞ்சடை திகழத்
தாணு வீற்றிருந் தன்னதாங் கயிலையஞ் சயிலம். (ங)

வேறு.

கின்னரர்கள் கந்திருவர் கிம்புருட ரிசைவல்லோர் கீதம் பாட, வுன்னரிய வன்னமறை முழங்கவெண்ணில் பலகோடி யும்பர் வாழ்த்த, முன்னவன்போ லெண்ணிறந்த சாரூப ரளவில ரா முனிவர் வாழ்த்தப், பன்னொருபான் கோடிருத்ரர் தாஞ் சூழப் பெறுங்கயிலைப் பாங்க ரெல்லாம். (ச)

வலங்கையின்மான் மழுச்சுரிகைப் பிரம்பேந்தி நந்திபிரான் வாயில் காப்ப, விலங்குமரி யணைமீக்கொண் டெண்ணிறந்த கதிரி ரவி யீட்ட மென்னத், துலங்குபர மானந்தச் சுகாதீதச் சிற் சொரூபஞ் சேரச் சோதி, மலங்கடியு மவரைமணந் துயிர்த் தொகுதி வளர்த்தனள்பொன் மலர்ப்பூங் கோதை. (ரு)

வேறு.

மருவும் பூவு மணியுமச் சோதியு
முருவு மாவியு மொண்பொன்னும் பூணுமாய்ப்
பொருவு மாகயி லைக்கிறை பூங்கிரித்
திருவுந் தானுஞ் சிறப்பொடு வாழுநாள். (௬)

வான நாட்டினின் மன்னனைக் கற்பகத்
தான நாட்டவெஞ் சூரைத் தடிந்திட
ஞான நாட்டன்பா னற்கும ரேசனை
மீன நாட்டத்து மெல்லியல் தந்தபின். (௭)

பஞ்சின் மெல்விரற் பாடகந் தாங்கலா
தஞ்சி லம்பரற் றுநிற்குஞ் சீறடி
வஞ்சி ஞானம் வளர்க்குங் கருணையா
னெஞ்சி லஞ்செழுத் துண்மை நினைவுறு. (௮)

இயக்க முற்ற சராசரம் யாவையும்
பயக்கு மன்னை பரம்பர னுமமா
நயக்கு மஞ்செழுத் துண்மையை நாடியே
மயக்க முற்று மனந்தளர் வெய்தினள். (௯)

போது லாஞ்சடைப் புண்ணிய மூர்த்திதாள்
மாது பார்ப்பதி வந்தனை செய்தொழி
லோது பல்லுயிர் கட்கு முதவிசே
ரேது வாக விசைப்பதின் மேவினள். (௧௦)

மாறி நிற்கின்ற வுண்மையும் வாசிமே
லேறி நிற்கு மியல்புநப் மாணைவஞ்
சீறி நிற்குந் திறமு மெழுத்தொன்றி
லூறி நிற்கு மெழுத்தஞ்சு மோதென்றாள். (௧௧)

அஞ்செ ழுத்தி னடைவு மடைவினி
னெஞ்ச முத்து நிலையை நிகழ்த்தெனப்
பஞ்ச முத்துமென் சீறடிப் பாவைக்கு
நஞ்ச முத்து மக்கண்ட னவிற்றுவான். (௧௨)

ஐந்து பூதமு மைந்து புலன்களு
மைந்து மூர்த்தமு மைந்து பிரமமு
மைந்து நற்றொழி லாகி நிறைந்தது
மைந்தெ ழுத்தினை யல்லதொன் றில்லைகாண். (௧௩)

நாமு நீயு நடுவிய மானனை
நாமு நீயு நணுகிமுன் பின்னுமாய்
நாமன் னுவகை நாடாது நாடியே
நாம கிழ்ந்திட வாசி நவிலென்றான். (௧௪)

ஐந்து வெம்புலன் சிந்தைகொண் டானபே
ரைந்தெ ழுத்துநம் மாதி யெழுத்திலே
வந்து சேரும் வகுக்கில் விரித்திடு
மிந்த வாறோ ரெழுத்தியல் பாமென்றான். (௧௫)

பேசொ ணாத வெழுத்தும் பிரணவத்
தோசை காட்டு மெழுத்து முணர்வித்தா
னாசை தீரஞ் செழுத்தை யறிவித்தான்
வீசு மெட்டெழுத் துண்மை விளம்பினான். (௧௬)

இன்ன மெண்ணிப்பல் பேதத் தியல்புதான்
பின்ன மேநம தஞ்செழுத் துண்மைதா
னுன்னிற் கேட்ட லுரைத்த விருவரா
மென்ன வுற்ற விடத்துண்மை யெய்தவே. (௧௭)

சாந்த நெஞ்சிற் றரத்தகு மெம்மிறை
சேர்ந்த நாமத் திருவஞ் செழுத்துமே
தேர்ந்து கந்து தெளிந்துணர்ந் தங்கிலே
சார்ந்தி ருந்தினிச் சாதிப்ப தேயெனா. (௧௮)

தம்பி ரான்றிருத் தாமரைச் சேவடி
யெம்பி ரானை யிறைஞ்சி யிசைத்தன
னும்ப ரானு முணர்வரி தாமெழுத்
தெம்ப ராதரித் தேத்து மிடமென. (௧௯)

வான நாதன் மலைமகள் கூறனு
மான வாய்மை யருளினன் றென்றிசை
ஞான பூமிதண் காவிரி நாட்டுள
தான மேன்மைத் தலைமவ ணேகென்றான். (௨௦)

பத்தி யோடும் பரஞ்சுட ரைப்பரா
சத்தி தாழ்ந்தெழுந் தாள்விடை கொண்டனள்
சித்தி செய்யுந் திறத்தி னுயிரெல்லா
முத்தி செய்யு முறைமையு முன்னியே. (௨௧)

கயிலை மாமலைக் கண்ணுதல் வாழுமச்
சயில நீங்கியோர் சாரலிற் சார்ந்துபின்
னயிலை நோக்கத் தருட்பரை சூழ்மணி
வெயிலு லாவும் விமானத்தை நாடினள். (உஉ)

வேறு.

எண்ணி லாச்செழுங் கதிர்த்திர ளெழுந்தென விலங்க
மண்ணி லாடகக் கிரியெனப் பலமுடி வயங்கத்
தெண்ணி லாமணி செம்மணித் திரளொளி திவள
விண்ணின் மீதினின் றெழுந்தது தெய்வத விமானம். (உங)

கண்ணி னும்புகுஞ் செவிபுகுங் கண்ணகன் ஞால
நுண்ணி னும்புகு மேருவை யளக்குமோர் நொடியின்
மண்ணி னும்புகு முலகமீ ரேழினும் வயங்க
விண்ணி னும்புகு மெண்ணினுங் கடியகல் விமானம். (உச)

இத்தி றத்தினன் மணித்தடந் தேர்மிசை யிமயத்
தத்தை மேற்கொண்டாள் கைத்தலந் தலையின்மேற் கொண்டு
மெய்த்த வத்தவர் விடைகொண்டா ரன்புமேற் கொண்டார்
கொத்த லர்க்குழற் சேடிமார் கவரிகைக் கொண்டார். (உரு)

வேறு.

ஆடகச்செந் திருமுகலாந் திருமகளி ரெண்மருவந் தருகிற் சூழப், பாடகச்சீ றடித்தெய்வப் பத்தினிமா ரெழுவர்புறம் படர்ந்து செல்ல, நாடகமென் கையரம்பை யுருப்பசியுந் திலோத்தமையு நடநஞ் செய்யக், கேடகவாட் டொழிற்சதுமா லினி காப்பச் செழும்பவளக் கிளிபோற் சென்றாள். (உகூ)

வெற்பரையன் மடப்பாவை யவ்வரையன் குலதீபம் விமானத் தேகச், சிற்பரைதன் கருத்தறிந்த செம்பொற்றேர் புனிதகங்கா தீர்த்த மெய்தத், தற்பரர்வே ணியினதிப்பெண் ணுமைபிரிந் தாள் நாமிருக்கத் தகுமோ வென்று, முற்படவந் தெதிர்கொளல் போன் முன்னிகழ்ந்து தோன்றியவம் முறையுங் கண்டாள். ()

கங்கைநங்கை தனையிமய மங்கைமகிழ்ந் தவ்வெல்லை கடந்து கங்கை, தங்கையென மருவுகவு தமைபார்த்துச் சோணைதீர்த் தத்தை நோக்கி, யெங்கையார் யமுனைதீர்த் தத்தணுகி யலைநருமதைப்பாங் கெய்திச், செங்குவளை மடக்கிள்ளை வீமநதிப் புனல் கடந்து தென்பாற் செல்ல. (உஅ)

அங்கண்வருவசுதேவன் பெயரானன் னதிகண்டா ளதற்குத்
தென்பாற், பங்கமிலாப் புனற்றுங்க பத்திரையை யருட்கண்
ணாற் பரிந்து பார்த்தாள், மங்களப்பூங் கோதைமிகு வேகவதி
தனைத்திருக்கண் வைத்தாள் தன்சேய், துங்கநதி கந்தநதித்
துறைசேர்ந்தாள் பாலாற்றின் றேற்றங் கண்டாள். (௨௯)

திருமணிமுத் தாநதிவெள் ளாற்றிடைச்சங் கமமதனிற்
றிருநோக் குற்று, றொருமணியைப் பழமலைச்சோ தியைவணங்கி
யகன்றுபுலி யூரிற் சேகி, திருபர்படி சிவகங்கை தனைப்புகழ்ந்து
விமானத்தி னிழிந்து மன்றிற், றிருநடனத் தரசிபோற் சாய்கொ
டிபோற் றிருமேனி சாற்றி நின்றாள். (௩௰)

நின்றுவிடை கொண்டேகி வேளூரில் வயித்தியரை நேர்ந்து
கீழ்பாற், சென்றுசா யாவனத்தி லிமயவல்லிக் கொடிபடர்ந்து
தெய்வத் தோணிக், குன்றுடையா னொடுஞானக் குழவிக்குத்
திருமுலைப்பாற் கொடுத்த பொய்கை, யென்றுமன மகிழ்ந்தி
ருந்து குணதிசையின் முல்லைவனத் தெல்லை சேர்ந்தாள். (௩௧)

பணிவரைத்தண் சுனைபூத்து மலைத்தே னறவொழுகப்
பகைத்தல் தீர்ந்து, சினவரிச்செங் கட்சிய மதயானைக் குழாத்
தொடும்போய்த் தெண்ணீ ருண்ணப், புனைவரிச்செஞ் சிறை
வளைவாய்ப் பருந்தரவி னொடுமிரைகள் பொதுவின் மாந்தக்,
குனிநுதற்பேழ் வாய்ப்புலிகள் மான்கன்றை யணைத்துமுலை
கொடுத்த வன்றே. (௩௨)

மலர்ந்திடுவ வரும்பனைத்து மணந்தருவ மலரனைத்து மாறாங்
காலம்,புலர்ந்ததரு தழைத்தரும்பி மலரொடுங்காய் கனிசொரிவ
பொழில்க ளெல்லா, முலர்ந்துபடுந் தருவனைத்துந் தழைத்
திடுவ வுலகீன்றா ளொருத்தி செல்லக், கலந்தமலர்ப் பெருந்
திரைநீர் வற்றியவும் பெருகுவபூங் கழிக ளெல்லாம். (௩௩)

## வேறு.

வளைத்த வெள்வளை மாதவண் சேறலு மார்பிற்
கிளைத்த மூவிலை யிளந்தளிர்த் தண்டழை கிளரத்
திளைத்த முல்லையந் தழும்பொடு மானந்தத் தேறல்
முளைத்தெ ழுந்தமை கண்டனள் பார்ப்பதி முன்னர். (௩௪)

### வேறு.

நாதவுருவேபோற்றி நாதாந்த மனோலயத்தி னடித்தாய்
போற்றி, வேதவுருவேபோற்றி வேதத்தி னுபநிடத வித்தே
போற்றி, பேதவுரு வபேதவுரு பேதாபே தத்துருவம் பெற்றாய்
போற்றி, போதவுருவேபோற்றி போரடர்முல் லைப்பொருளே
போற்றி யென்றாள். (௩௫)

மின்போலும் படர்சடையான் திருமேனித் தழும்புபெற்ற
விதத்தைக் கண்டா, ளென்போலு மரன்மேனி தழும்புபட வணை
த்திடவே யீது மிங்ஙன், முன்போந்த தவமியற்றி நின்றதென்று
நகையிளந்தண் முகையை யீன்றாள், பொன்போலும் பரந்த
ருகின் முல்லைதனைப் பார்த்தருளாற் புகழ்ந்து சென்றாள். (௩௬)

சென்றளவிற் செம்பொற்றேர் தெக்கணா மூர்த்திமுன்
னர்ச் செல்லா தாகி, நின்றளவிற் பரவசமாய்ச் சுகாதீத மேவி
டவே நின்றா ணொஞ்சி, வின்றளவி லெழுத்தஞ்சும் பக்திசெய
முத்திதரு மிடமீ தென்றா, ளன்றளித்த மெய்ஞ்ஞான குருமூர்
த்தம் போலிருந்த வருளைக் கண்டாள். (௩௭)

அரவடரும் புரிநூலு மரவூருந் திருமார்பு மநந்த கோடி,
யிரவுதரு தளிரொளியு மிலங்குபுலித் தோலுடையோ டிருந்த
பாங்கும், வரதவப யமுஞான முத்திரையுங் கதிர்ச்சடையு மதி
நிலாவும், பரவுமலர்த் திருமுகமும் விழிமூன்று மருள்வடிவும்
பவானி கண்டாள். (௩௮)

இவணல்லாற் பிறிதியாதே யென்குறையை மாற்றுமிட மிவ்
வூர் நீங்காத், தவனல்லாற் பிறர்யாரே யென்றவத்திற் சித்திதரத்
தக்கார் மிக்க, சிவபிரான் பணிக்கேற்ப தருதிரெனச் சிலதிய
ரைக் கூவச் சென்றா, ருவகைபூத் திறைவியரு டலைக்கொண்டு
விடைகொண்டா ரொல்லை நீங்கி. (௩௯)

### வேறு.

கோட்டினில் வாவி தன்னிற் கொடிகளி னிலைத்தி னுள்ள
தோட்டிணர் மலர னைத்துந் தோகைமார் கற்ப கப்பொ
னாட்டினும் புவிகண் மீதுங் கைவளை நாலக் கொய்தே
யீட்டிய வன்பி னோடு மிறைவிமுன் னுய்த்து நின்றார். (௪௰)

அஞ்சன வேற்க ணல்லா ளம்பொற்றே ரிழிந்து தூய
மஞ்சன மாட்டிச் செவ்வி மலரினா லருச்சித் தேத்தி
யெஞ்சலி லுபசா ரத்தி னியல்பெலாங் கொடுத்துப் பின்னர்
நஞ்சணி கண்டன் பாங்கர் நாட்டினாள் ஞான நாட்டம். (௪௧)

புலன்வழிப் பட்ட தன்று புந்தியி னினைந்த தன்னாற்
பலன்வழி யெழுத்தோ ரைந்தாற் பார்ப்பதி நோற்ற பான்மை
நிலன்வழி யுயிர்கட் கெல்லா நிலையமா நிமல னார்க்கு
நலன்வழிக் கருணைப் பார்வை நங்கைக்குந் தெரியு மன்றே. (௪௨)

வளர்ந்திடு மமுதந் தோய்ந்த மதிக்கலை வடிவா னீசன்
விளங்குபங் கிருந்த மெய்யும் வேய்ந்தது நிலவே யல்லா
விளந்தளிர் மேனி கன்று மென்னுடை வெப்பத் தாலென்
றுளந்தளர்ந் தோடி வீழ்ந்தா னுவரிமே லுதய பானு. (௪௩)

பகலவன் பகலோ டேகப் பங்கயப் போதுக் கெல்லா
மிகல்வன கங்கு லோடு மெழுந்ததென் றுவரி மீதின்
மகிழுமா னந்தச் சோதி மாசிலா மணியான் வாழுந்
திகழ்திருக் கோயி லந்தித் திருவிளக் கிட்ட தென்ன. (௪௪)

கறங்குதெண் டிரைகண் மீது கலைநிலாத் திங்கள் பொன்னி
பிறங்குதெண் முல்லை மூதூர்ப் பேரொளி பிறங்க காட்சி
யுறங்கிய திருமால் முன்போ லொள்ளிய வெள்ளிக் கும்பத்
திறங்குபா லருவி யீசற் காட்டினா னென்ன லாமால். (௪௫)

வரைபடுங் கோபு ரத்து வயங்கவான் தீபம் போர்த்தார்
புரைபடு மதிலின் மீது புதுமணி விளக்கு வைத்தார்
தரைபடுஞ் சூழ லெங்குந் தனிமணி யொளிகள் சூழ்ந்தார்
நிரைபடு கற்பி னார்பொன் னாலத்தி யேந்தி நின்றார். (௪௬)

ஆயகன் னியரிற் பல்லோ ரலர்மழைத் தூவ யார்க்குந்
தாயகன் புடையிற் சில்லோர் சாமரை யிரட்ட வெண்மர்
மேயகற் பினர்பா வாடை வீசவேழ் மின்னார் காப்ப
நாயக னிடத்துத் தத்வ மசிநிலை நயந்து வாழ்ந்தாள். (௪௭)

வேறு.

கனகமா ளிகையெலாங் கடைதி றப்பவுற்
பனகண்மா தருந்துயர்ப் பால நீங்குற
வனகனாண் மையினர சடங்கச் சேர்ந்தது
தினகரோ தயமணி சிகர பூதரம். (௪௮)

## வேறு.

அரவரிவம் பகையாற் சிம்பு ளானவன் கையா லஞ்சா
வரமினிக் கோடல் வேண்டு மலைமக ளிடத்தி லென்னப்
பரவவந் திடுவான் போலப் பரவைவெண் டிரையி னுப்ப
ணிரவிவந் துதயஞ் செய்தா னிளங்கதிர்க் கரங்கள் கூப்பி. (௪௯)

உள்ளுண ரெழுத்தஞ் சுன்னும் யோகசா தனையா லிங்ஙன்
வள்ளலைப் பரிந்து வந்து மலைமக ளிருந்தா ளென்று
புள்ளொடு மாவும் யாவும் புலன்வழி காத்துத் தாழ்த்துந்
துள்ளுநீர்க் கடலுந் தத்துந் துழனிகண் டேங்கிற் றன்றே. (௫௦)

இன்னவா றமலன் பாங்க ரிரவுநன் பகலு நோக்காத்
துன்னருஞ் சிவலோ கத்தி லுயிரெலா மசைவு மின்றிப்
பின்னரு மாண்பெண் கூடப் பெற்றிலாப் பெற்றித் தாக
வன்னமென் னடையாள் நோற்று ளைம்பதிற் றிரட்டி யாண்டு. ()

தேவதுந் துபிமு ழங்கத் திருவிசை கீதம் பாடப்
பூவலர் மாரி வானோர் பொழிதரப் பூத ரார்ப்ப
மூவர்தம் பெருமா னாற்கு முதல்வன்மா துமைபா லிக்கும்
பாவனைக் கோலங் கொண்டு படருமால் விடைமேல் வந்தான். ()

பாலலோ சனத்தான் வந்தான் பனிமதிச் சடிலன் வந்தா
னாலமா மிடற்றான் வந்தா னம்பிகை மணாளன் வந்தான்
சூலமார் கையான் வந்தான் சுரர்பிரான் வந்தா னென்றே
யேலவார் குழலார் கேட்ப வெழுந்தது சின்ன வோசை. (௫௩)

புனைமதி மவுலிப் பொற்பும் புயநான்கும் விழிகள் மூன்றும்
வனைதரு மிதழி மார்பு மழுவிடைக் கிசைந்த வாய்ப்புந்
தனையறிந் தவர்க்குக் காட்டுந் தாமரைத் தாளு மின்னா
ணினைவுறும் படித்தாங் கோல நிமலனுங் காட்டி நின்றான். (௫௪)

வேனிலா டலை வென்றான் றாளினில் வீழ்ந்தெ ழுந்து
தானிலாச் சகோரம் போன்முட் டூசிகாந் தம்போ லம்மான்
பானிலா விழியி னீங்காப் பார்வையாற் பருகா நின்றாள்
கூனிலாத் திங்கட் சூடுங் குழகனே போற்றி யென்றாள். (௫௫)

விதிசிரந் தொடுத்த சன்ன வீரமா லிகையாய் போற்றி
திதிசெயு மாலோற் கன்று திகழ்படை யளித்தாய் போற்றி
கதிதரும் விடைமேற் கொண்ட கருணையங் கடலே போற்றி
துதிசெயு மடியா ருள்ளச் சோதியே போற்றி யென்ன. (௫௯)

இறைவியை யிறைவன் காணு விருகையாற் றழீஇக்கொ
ண் டன்பால், மறைவிடை யிடப்பா லன்பான் மகிழ்ந்தினி திரு
த்தி மாதே, நறைமலர்க் குழலே நம்முன் னவிற்றவோர் வரமு
ண் டென்ன, குறையுள தெனினுந் தீரக் கொடுக்குது மென்
றான் பின்னும். (ருஎ)

அருளுருப் பெற்ற துன்னை யறிதியே நாமு நீங்காப்
பொருளுரு வனுசெ ழுத்தின் பொற்பெனப் புகன்று னீயு
மொருவருங் கருதற் கெட்டா வுண்மையுஞ் சிந்தித் தந்தத்
திருவுருக் கொண்டா யென்றுஞ் செப்பினன் தேவர் தேவன்.()

மூவர்க்கு முதன்மை தந்த முக்கணு னிறைவி யோடுந்
தேவர்க்கு மன்பர் யார்க்குந் திருவருள் பொழிந்து வேத
நாவர்க்குந் தெரிய வொண்ணு நான்மறை விடைமீக் கொண்டே
யேவர்க்கு மிறைவ னான வெம்பிரான் கயிலை சேர்ந்தான். (ருகூ)

இப்பதி தனக்கு நேரா யீரேழு புவியி லொன்று
மொப்பதி லறிவான் மிக்கோ ருலகின்கண் மேன்மை யாக
முப்பதி யுரைத்தா ரந்த முப்பதித் திறனு மிவ்வூர்
கைப்பதித் திட்ட நெல்லிக் கனியெனக் காட்டு மன்றே. (கூ0)

திருவெழுத் தஞ்சு மோதச் சித்திக்கு மிடமு மிஃதே
வருமருந் தோதயங்கள் மகோதய மாகத் தோற்ற
மிருசுடர்க் கிரக ணந்தா மிந்துவோ டிரவி கூட்டம்
பொருவிலாப் புநிதத் திங்கள் விதிபாதம் பொருந்து நாளில் (கூக)

தேசிக னெனப்பா வித்துத் தெக்கணு மூர்த்தி முன்ன
ராசிலாக் குரவ னோது மடைவினஞ் செழுத்து நாடி
மாசிலா திருந்து நாவின் வழுத்திய தவத்தோ ரென்றும்
பாசப்பந் தங்க ணீங்கிப் பரகதி யடைவர் திண்ணம். (கூஉ)

பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்திபெற்ற சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் உஏ.

—※※—

## (௬) பரத்தை கதிபெற்ற சருக்கம்.

மைத்த டங்கணா ளுலகமீன் றருள்மலை மடந்தை
மெய்த்த வஞ்செய்த காதையின் விரிவெலாம் விரித்தா
யித்த லந்தனி லின்னுமற் றுளவதி சயங்க
ளுய்த்து ணர்ந்துநீ சொல்லெனச் சவுனக னுரைப்பான். (௧)

கேட்ட வெல்லையிற் சவுனக னுரைமிகக் கெழுமிச்
சூட்டுக் கண்டிகைச் செஞ்சடைப் பெருமுடி துளக்கி
வாட்ட மின்றியே வளர்ந்தபே ரருள்மன மகிழ
நாட்டு முண்மையாற் சூதமா முனிவர னவில்வான். (௨)

சாதி பேதங்க ளளப்பில பொருந்திய சகத்தோர்க்
கேது வாகிய சுகந்தரு மணந்தரு மிதழிப்
போது லாவிய வேணியான் மங்கள புரமென்
றோது மந்நகர்க் குரைத்திட வுவமைவே றுண்டோ. (௩)

பொய்யு மாயமுங் கொலைகளும் வினைகளும் பொருந்து
மைய வேற்கண்ணா ளெவரையு நேசிக்கு மனத்தாள்
மெய்யி னாலிரு கையினாற் சுரதமே விளைத்துப்
பைய ராவல்குல் விற்றுணுஞ் சேரியம் பரத்தை. (௪)

ஆன நாட்டினிற் பரத்தைமு தருந்தவ மதனாற்
கான நாட்டையுங் களிவண்டி னாட்டையுங் கண்டு
வான நாட்டினர் பணிமுல்லை வாயிலின் வசித்து
ஞான நாட்டன்வாழ் பெரும்பத மடைந்தனள் நலத்தால். (௫)

என்று சூதனு முரைத்திட விருந்தவம் வளர்ந்த
குன்று போல்வருஞ் சவுனக னெதிர்மொழி கொடுப்பா
னன்றி யங்கவள் வரவுமங் கவள்செயுந் தவமு
மின்றெ னக்குநீ சொல்லெனச் சூதனு மிசைப்பான். (௬)

உம்பர் நாயகன் பொன்னுல காமென வுரைப்பா
னம்பொன் மேருவின் புறத்தரை யாமென நவியுங்
கொம்பர் நேரிடைக் கங்கையந் திரைமணி கொழிக்குஞ்
செம்பொ னேவிளை காஞ்சன பூமியாந் தேயம். (௭)

அன்ன தேயத்திற் கணிகையர் தமக்கெலா மரசே
யென்னக் காமுக ருயிரென வணங்கணா ரிரதி
மின்ன னாளெனக் கண்டவ ரையுற விரிபூண்
பொன்ன னாளவண் வாழுநாட் கதிபெறும் பொருட்டால். (௮)

யார்க்கு மாதர வாகுமத் தேயப்விட் டயலே
சேர்க்குங் காதலன் றன்னொடு மேறினாள் திரைமே
லேற்கு மோர்மரக் கலமிசை கேரளத் தியல்பு
பார்க்கு மாசையாற் பரத்தைநீ ருவரிமேற் படர்ந்தாள். (௯)

கைத வக்குலப் பரத்தையங் கேகலுங் கார்வான்
பெய்தெ றிந்திடத் திவலைகள் தரங்கமும் பெருக
வெய்த பாணம்போற் காற்றெழுந் தலம்வர விரங்கி
வெய்து யிர்த்தனள் நடுங்கின ளொடுங்கினள் மெலிந்தாள். (௰)

இவளு மித்துய ருழந்துமுன் னியற்றுமா தவத்தாற்
றவள நீற்றினார் முல்லைமா நகர்க்கரை சார்ந்தா
ளவளி னிச்செயும் பெரும்பவங் காண்பதற் கஞ்சிப்
பவள மால்வரைப் புறத்தினிற் கதிரவன் படர்ந்தான். (௰௧)

அதிரு மேழ்கடற் கப்புறத் திருநில மடைந்து
கதிர வன்றனைச் செகுத்திடு வோமெனுங் கருத்தா
லெதிர்ந டந்துநாற் றிசையையும் வளைந்துகொண் டேகப்
புதிய சூரியன் மறைந்தன னிருண்டது புவியும். (௰௨)

ஆய வெல்லைகார் காலமு மாயவப் புரத்தின்
மேய திங்களி லமாவாசைக் கங்குலும் விரிப்பத்
தீய ளிங்கிவள் துணைவனுந் தானுமாச் சேர்ந்த
வாய வப்புரங் கொள்ளியுங் கொண்டென வந்தாள். (௰௩)

வந்தவ் வூர்புகுந் தீசனார் மாசிலா மணியா
ரெந்தை வாழ்திருக் கோயில்முன் மண்டபத் தேறி
முந்து தன்கையிற் கொள்ளியிற் றீயையு மூட்டிச்
சுந்த ரக்கலை யாற்றரைப் புழுதியுந் துடைத்து. (௰௪)

ஆடை யாகிய பாயலை விரித்ததி லமர்ந்து
வாடை பூசிநன் மலர்முடித் திருவரு மகிழ்ந்தே
யாடல் வேளிடத் திரதிசேர்ந் தெனவறு ராக
வேடை தீரவே மணந்தனர் புணர்ந்தனர் விருப்பால். (௰௫)

விரவு மாசையாற் காமச்செந் தீயினான் மெலிவார்
பரம னாலய மென்பதுங் குறித்திலர் பரத்தை
திரமி லாதவ னுறங்குமவ் வெல்லையிற் றீநச்
சரவந் தீண்டலு மக்கணத் தாருயி ரிறந்தாள். (௰௬)

வேறு.

மற்றிவ ளிறத்தலு மடித்திதழ் கடித்துப்
பற்றினர் பாத்தையுயிர் பாசவலை வீசி
யெற்றினர் கதுப்பினி லிடித்தனர் முகத்திற்
சுற்றினர் புறத்திலெம தூதர்கொடு போத. (௰௭)

முட்டின ரடிக்கடி முலைத்தலையி லெட்டிக்
குட்டினர் மயிர்த்தலை குறைத்தன ருருட்டிக்
கட்டின ரறுத்துடல் கழித்தனர் பிளக்க
வெட்டினர் துகைத்தன ருதைத்தனர் மிதித்தார். (௰௮)

வேறு.

எரித்தழல் கொளுத்திவைத் தெடுத்ததிற் கிடத்துவா
ருரித்துடற் றசைக்கொழுப் பறுத்தொறுத் துருக்குவார்
கரத்தினைப் பிணித்தகை கழுத்துறப் பொருத்துவார்
பாத்தையைக் கயிற்றினிற் பிணித்தபொற் பணைக்கையார். (௧௯)

வேறு.

இப்பரி சறிந்து நந்தி யெம்பிரான் பேழ்வாய்ச் செங்கட், கொ
ப்பரி வயிற்று வெண்பற் குறட்பூதப் படையை நோக்கி, மைப்பிற
யம தூதர் மாண்டிடப் பொருது வல்லே, துப்பிதழ் மழலைச்
செவ்வாய்த் தோகையைக் கொணர்மி னென்றான். (௨௰)

வேறு.

வந்தன ரெதிர்ந்தனர் நமன்றமர் மடித்துச்
சிந்தினர் கரங்களொடு திண்சிர நெரித்தார்
தொந்திசரி யும்படி துகைத்தனர் மிதித்தார்
நந்திபணி கொண்டகண நாதர்சிவ தூதர். (௨௧)

தற்கமிடு கின்றவர் தடக்கையை யொடித்தார்
கற்கொடெறி யுஞ்சிலர் கடத்துமிவ ணென்றே
பற்கொடு பொருஞ்சிலர் பதைத்திட வடித்தார்
சொற்கதறி நொந்துயம தூதர்திர ளோட. (௨௨)

வேறு.

சொற்ற வித்திற மாமெம தூதரைத் துரந்து
கொற்ற வன்பதிக் கலகிட்டு விளக்கொளி கொளுவி
மற்று மத்தலத் திறத்தலா லவ்வினை மாற்று
நற்ற வத்தினற் பாத்தையைச் சிவகண நாதர். (௨௩)

தீதி லாதகற் பகமழை பொழிதரச் சிறிதுங்
கோதி லாததே வேந்திரன் விமானமேற் கொண்டு
மாதர் சூழ்வரத் தேவதுந் துமியொலி வழங்க
வாதி நாயகன் கயிலைமால் வரையிடத் தடைந்தார். (உச)

ஆலை யத்திற மறிந்திலர் ளரன்புக ழறியாள்
சேலை யித்தலை யாற்றரை துடைத்திருள் தீர்த்த
வாலை யத்திறந் தானலாத் தவஞ்சற்று மறியாள்
மேலை முத்திபெற் றாள்சிவ தருமமார் விதிப்பார். (உரு)

வேறு.

இன்னவா பரத்தை மாது மிருங்கதி யடைந்தா ளங்கண்
மன்னிய கால தூதர் வடவையி னுருத்துப் பொங்கித்
தன்னிக ரில்லாப் பாசந் தடித்தறி சூலந் தாங்கிக்
கன்னெடு மலைபோல் வாழுங் காலன்மா பதியிற் சார்ந்தார்.(உசு)

சண்டன்மா சண்டன் சித்தந் தகமிகுத் தவமிகுத்தும்
மண்டிய காலன் தூதர் மற்றுளோ ரேவல் செய்ய
வென்றிகழ் சித்ர குத்த ரிறைஞ்சமை மலைபோல் வாழுங்
கொண்டலைத் தரும நீதிக் கூற்றனைப் பணிந்து சொல்வார்.(உஎ)

ஐயநின் னேவ லாலே யணிவளைப் பரத்தை தன்னை
மெய்யுறப் பிணித்துச் செல்லும் வேலையி லெம்மைச் சாடிச்
செய்யவார் சடையான் பாங்கிற் சிவகண நாதர் போந்து
வெய்யவெம் பவஞ்செய் தாளை விமானமேற் கொண்டு செல்ல.()

நொந்தன மீச னேவ றேனுன்மையோ ரென்றே யஞ்சி
வந்தன மென்ன லோடு மறலியங் கதனைக் கேளாச்
சிந்தையிற் றெரிந்து தேர்ந்து சிவதரு மத்தி னுண்மை
யிந்தவா றுயிற் றேவென் றெழின்முடி துளக்கி நின்று. (உகூ)

நிருமலன் றரும மேன்மை நினைந்திடா நிரயத் தோர்க்குந்
தருமதே வதையே யன்னான் றவநெறி யுரைப்பா னெண்ணிப்
பொருகிடாப் பரிமேற் கொண்டு நரகலோ கத்துப் போந்தான்
கருமிகள் வருந்தக் கண்டான் கருணையாற் கழற லுற்றான்.(கூ0)

வேறு.

செந்தழல் மறந்தீர் சிவன்றனை மறந்தீர்
சந்தியு மிகழ்ந்தீர் தவங்களு மிகழ்ந்தீ
ரந்திபக லையமிடு மன்னையு மறந்தீர்
தந்தையனை நன்றியது தன்னையு மறந்தீர். (கூக)

மண்புகழ முன்பொருவர் வைத்ததரு மத்தைக்
கண்குளிர வன்பினொடு கண்டுமறி யீரே
நண்பொடிது நன்றென நவின்றுமறி யீரே
விண்புகழ் தலங்களை மிதித்துமறி யீரே. (௩௨)

வேறு.

சூழ்புவி யிற்றிற வாலயை முந்தக் தொழுகில்லீ
ராழ்நதி யிற்போய் மூழ்க வயர்ந்தீ ரறிவில்லீர்
தாழு மவர்க்கே தாழ்வுற நிற்பீர் தயவில்லீர்
வாழ்வு குறைத்தீ ரேழை நினைத்தீர் மதியில்லீர். (௩௩)

வேத மொழிக்கே யேத முரைத்தீர் வினையுந்தீ
ராதுல ருக்கே லோப முரைத்தீ ரறிவில்லீர்
வேதி யருக்கொன் றீவ தொழித்தீர் விறன்மிக்கீ
ரீதன் மறுத்தீர் காதல் மிகுத்தீ ரென்செய்தீர். (௩௪)

கோளரி யொத்தீர் கோளு முரைத்தீர் குணமற்றீர்
வாள்கொடு மிக்கோ ராருயிர் செற்றீர் வரைவிற்றீர்
மூளெரி யிட்டே வாழ்மனை செற்றீர் முனிவுற்றீர்
பாளை மடற்சா றாறல் குடித்தீர் பழிவைத்தீர். (௩௫)

வேறு.

அரசர்மனை கற்பழித்தீ ரளவில்கன் னியர்ப்புணர்ந்தீர்
குரவர்மனைக் கிசைவைத்தீர் குலமாதர் வரவழைத்தீர்
பரவரிய முன்னவன்றன் பன்னியையும் பாடுரைத்தீர்
விரவுமறை யாளர்குல மெல்லியர்க்கு விரும்பினீர். (௩௬)

வைகறையி லெழுந்துசிவ வந்தனைசெய் திருமிலீர்
பொய்கைதரு தெய்வீகப் புனலிடைத்தோய்ந் திருமிலீர்
செய்கைபெறு தந்தைதாய் தீப்பசிதீர்த் திருமிலீர்
மெய்மையினாற் சிவன்முன்னர் வீழ்ந்துபணிந் திருமிலீர். (௩௭)

சங்கிருந்த தடக்கரத்தான் றனக்குமன்பு செய்கிலீர்
கொங்கிருந்த மலரிலைநீர் கொணர்ந்தரனைப் பணிந்தறியீ
ரங்கிருந்து செய்தகொலை யளவிலவங் கவைமறந்தீ
ரிங்கிருந்தே யரிதுயிர்த்தால் யானதற்கென் செய்கேனே. (௩௮)

வேறு.

முன்னதிபா தகம்புரிந்த வேசிகருங் கங்குல்தனின் முல்லை
நாதன், சன்னிதியிற் செயும்வினையுஞ் சாற்றரிது கலைத்தலையாற்
றரையைத் தூர்த்தாள், பின்னதிகந் தருமமில்லை விளக்குமன்று
கொள்ளியொளி பிறங்கச் செய்தா, ளென்னதிகா ரமுங்கடந்தா
ளப்பரிசு போலுமொன்றை யியற்றி னீரோ. (௩௯)

வேறு.

ஆகலா லென்மருங்கி னருளிலாக் கிங்க ரர்செய்
வாதையால் வருத்தமுற்றீர் மற்றுநர கிடைப்புக்கீர்
பாதிமாமதியணிந்த பழம்பொருளை நினைத்தீரேற்
போதலாம் வானுலகி னினியென்னப் புகலலுமே. (௪0)

வேறு.

அரகர வென்றே சிவசிவ வென்றே யறைகின்றார்
புரகர வென்றார் சிரகர வென்றே புகல்கின்றார்
பரமப தந்தரு நிருமல வென்றே பகர்கின்றார்
குரவ னெனுங்கா லனையு மகிழ்ந்தே குறைகின்றார். (௪௧)

வேறு.

மற்றி வன்சொ லும் வாசகங் கேட்டுமா நரகத்
துற்று ளோரெலாஞ் சிவன்றிரு நாமமே யோதி
நற்ற வத்தராய்க் காவிரி சோணைநன் னாட்டுக்
கொற்ற வேந்தரா யறிவுடன் வந்துருக் கொண்டார். (௪௨)

பரத்தை கதிபெற்ற சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் உ௪உ.

—※※—

## (எ) தீர்த்தவிசேடச் சருக்கம்.

செவிப்புலன் முல்லை நாதன் றிருக்கதை யமிர்தங் கொள்
ளத், தவிப்பிலா வுவகை யோங்கச் சவுனக னெழுந்து சென்னி,
குவித்தசெங் கரத்த னாகிக் குணலைகொண் டடியிற் றாழ்ந்து,
புவிப்புரா ணிகனைச் சூதப் புனிதனைப் போற்றிச் சொல்வான். (க)

தீர்த்தவைம் புலத்தின் சால்புந் தீர்த்தங்க டம்மின் மேலோர்
சேர்த்தநூன் முறையி லாடுந் தினங்களின் றிறனு நாக
மார்த்தகோ டீரன் பாத மந்தணற் களித்த பண்புங்
கூர்த்துணர் சிந்தை யெந்தாய் குறைபடா துரைத்தி யென்றான்.

என்னலுஞ் சூதன் கேளா வெம்பிரான் முல்லை மூதூர், நன்னலஞ் சுருதி யாலு நவிற்றரி தியானே சொல்வன், பின்னருஞ் சிறிது சொல்கேன் பிறங்குதீர்த் தங்க டம்மை, யுன்னலும் பவத்தை மாற்று முணர்தியென் றுரைத்தான் பின்னும். (௩)

பங்கயப் பொகுட்டிற் பாவை பார்மகள் பாங்கர்ச் சூழச்
செங்கையிற் றிகிரி தாங்குந் திருமறு மார்பன் முன்னங்
கங்கையிற் றுளைந்து திங்கட் கற்றையஞ் சடையா னீங்கா
மங்கைமெய்ப் பங்கன் முல்லை வனத்தினில் வந்து சேர்ந்து. (௪)

அரியணைச் சேக்கை நீங்கி யறிதுயி லாழி நீத்துத்
தரணிகாத் தருளுந் தூயோன் றவிலஞ் செழுத்து மோதி
வரமருள் மாசி லாத மணிதனை யருச்சித் தேத்தி
யிரவுநண் பகலு நோக்கா திலக்கமோ ரிலக்க மாண்டு. (௫)

தன்றவக் குமரன் சாபத் தழைகணுக் கோது தள்ளி
மென்றிடு மாலைத் தீங்சா றருப்பமாய் விரும்பி நீலக்
குன்றென நின்றான் முல்லைக் கொடித்தழும் புடையான் மேனிக்
கென்றுமே யாட்டி மாத ரிருவரு மேவல் செய்ய. (௬)

நிலவவ னினவான் றீம்பா னிறைகடத் தேந்தி யார்க்குந்
தலைவன்மே னியினி லாட்டித் தாட்டுணை பரவா நின்றான்
குலகிரி நிறுவிப் பாந்தட் கொளுவிவே லையைக்க டைந்தான்
குலவிய வமுத சார முப்பருக் குதவு வான்போல். (௭)

வேறு.

தனுவளைவிற் பூண்டிடவே தரிக்கையாற் பின்னசலந் தங்குமாற்றாற், பனகன்மேற் படர்கையாற் பங்கயமுன் னுருமேவும் படித்தா லன்றி, வினவுகடற் சூழ்விடமுண் டிடுதலாற் றிருநெடுமால் மேகம் போலுந், தினகரலோ சனம்போலு மிருந்து மனம் பொருந்துதவம் செய்யு நாளில். (௮)

அந்தரதுந் துமியியம்ப வண்டர்பூ மாரிசொரிந் தருகிற் போதச், சுந்தரவெள் விடைபுடைசூழ் நந்திபிரான் பூதத்தின் றொகுதி சூழ, விந்திரவின் னுதற்பாவை யிடப்பாகத் தினிதி ருப்ப வெழுத்தோ ரைந்தாற், செந்திருமால் பத்திசெய்யச் சித்தி யெய்தும் படியிருந்தான் தேவ தேவன். (௯)

வேறு.

மண்ணிடந் தழுன்று தேடு மலர்த்தாட்டா மரையின் மீது
கண்ணிடந் தணிந்த வன்பன் கயிலைநா யகனைக் காணு
வெண்ணிடுந் தகுதிக் கெட்டா வின்புறப் பணிந்து வீழ்ந்தான்
பண்ணிடுந் துதிகள் பாடி யாடினன் பரவிப் போற்றி. (௰)

கண்ணனுங் கனிந்து போற்றக் கண்ணுதல் கருணை மீக்கொண்
டெண்ணருந் தகுதி நல்கு மேதுமந் திரத்தின் காப்பால்
மண்ணகங் காப்பா யுன்பால் மந்திர வுருவந் தந்தோ
நண்ணருஞ் சித்தி பெற்றாய் நன்றுதா னென்றான் பின்னும். (௧௧)

காசிகே தாரந் தென்னற் கயிலைநற் சோம நாத
மாசிலாக் கோகன் னஞ்சூ ழரீச்சரம் விருத்த காசி
மாசிலாத் தில்லை காழி மாயூரங் குடந்தை யையா
றேசிவ லோக மூதூ ரின்னுநற் றலங்க ளுண்டால். (௧௨)

தானமுந் தவமு மொன்று கோடியாய்த் தழைப்ப தன்றி
ஞானபூ மியதா மெண்ணி னற்றலங் கட்கு மேலா
மானவிப் பதியி னிங்கா வருளொடு வாழ்தி யென்று
வானநா யகனன் றேகி மாதொடுங் கயிலை சேர்ந்தான். (௧௩)

செங்கண்மால் கரிய கண்டன் றிருவருட் செல்வம் பெற்றுச்
சங்கமூர் கடல்வாய் முல்லைத் தனிநெடும் பதியின் சீர்த்தி
யெங்கணும் விளங்க வோதி யெல்லையு மிரியா தென்று
மங்கைய ரிருவ ரோடு மகிழ்ந்தினி திருந்தா னங்கண். (௧௪)

கீழ்திசைப் பால தாகக் கேடிலாக் கடவுள் முன்னர்ச்
சூழ்திரைப் புனித தீர்த்தம் சுரர்நதி பெற்றித் தாகு
மாழ்திரை யமலிப் பாய லண்ணறன் வகுத்த தங்கண்
மூழ்கினோர் பவவே லைக்குள் மூழ்கிநீந் தியவோர் முத்தர். (௧௫)

ஆவணித் திங்க டன்னி லமரபக் கத்து ரோணி
கோவலர் மகர்கொண் டாடுங் கோகுலாட் டமிசேர் நாளி
லேவரே யெனினு மாயோ னியம்புதீர்த் தத்தின் மூழ்கிற்
றேவரே யாவ ரன்னோர் சிந்தித்த வெவையுஞ் சேரும். (௰௬)

மாவிடுந் தீர்த்த மாடன் மாதவர்க் கன்றி யெய்தா
வாவிடும் வீழ்திற் றூங்கு மருமகப் பேறி லாதோர்
பாலொடுங் கடமும் பொன்னும் பரிவொடு மறையோர்க் கீந்து
மேவிடும் புனலி லாடிற் புதல்வரைப் பெறுவார் மெய்காண்.(௰௭)

அன்றியு மிந்து வாரத் தமாவாசி விதிபா தஞ்சேர்
நன்றிநன் னாளின் மாயோ னல்குநீர்ப் பொய்கை தன்னி
லொன்றிய வன்பின் மூழ்கி யுயர்ந்தவர்க் குதக நல்கி
லென்றுமே பெறுவர் முத்தி யெய்துவார் வினையை யெய்தார்.()

மன்னுகார்த் திகைத்திங் கட்செவ் வாயெனும் வார நான்குந்
துன்னுமா மறையோர் தம்பாற் றாசுகந் தளித்துத் தோய்ந்தோர்
முன்னுவெண் குட்ட ரோக முயலகன் முதலா நோயி
னின்னலுற் றிடினு மாற்று மிகபரத் தெழிலு நல்கும். (௰௯)

திசைமுகத் தெண்டோள் வேதன் செய்திடும் பிரம தீர்த்தந்
திசைகொள்வை காசி மாதத் திலங்குபூ ரணையி லாட
விசையமெய்ஞ் ஞான வாளால் வெவ்வினைப் பகையை வெட்டி
வசையிலாச் சுருதி கூறு மனோவதி யடைவார் பின்னும். (௨௰)

விரதமு நாலேழ் கோடி விரதமுன் றவத்தி லொன்றை
வரதமுற் றனுட்டிப் போரை மயக்கிய விரத பங்க
கரணமு மகற்றிச் செய்த விரதத்தின் பயனுங் காட்டுங் [றும்.
குரவர்தாய் தந்தை பாற்செய் கொடும்பெருந் துரோகங் குன்

தடங்கடற் புவியே மூண்டான் றன்படி முந்நீர்த் தீர்த்தந்
துடங்கிமூழ் கிடிலி ராசத் துரோகம்வா தனைத்தீ யூட்டல்
விடங்கொடுத் திடல்சே ராத மெல்லிய விடத்துச் சேர்த
லடங்கலு மவரைப் பற்று வருந்தவைக் கரச ராவர். (௨௨)

வந்தித்து வணங்குந் தூயோர் வன்னியோர் பெரியோர் தம்மை
நிந்தித்த பழிச்சொல் வீட்டு நீள்வினைத் தொடர்பு நீக்குஞ்
சந்திக்கும் வழுவு வந்த தடைபல புறத்துத் தள்ளுஞ்
சிந்தித்த தன்மம் வாய்க்குந் தேவர்தோய் வசிட்ட தீர்த்தம். ()

ஆடிசித் திரைதைப் பூச மைப்பசி மாதத் தோற்றங்
கூடிய மதியம் பானுக் கோளொடுங் கூடுங் காலம்
நீடிய வாய நாளி னெடுமுனி புனலின் மூழ்கி
ஞடிய செல்வம் வாணாள் நற்போக நயந்து நல்கும். (உச)

விளங்கிய பிரம தீர்த்தம் விண்டுபுட் கரிணி மிக்க
வளங்கொள்சங் கரத டாகம் வசிட்டநீர்ப் போரா விந்த
மளந்திட நின்ற செங்கை யகத்தியன் வாவி மேலோ
ருளங்கொளும் பிரம தீர்த்த மொன்றுக்கொன் றுட்சி யாமால். ()

அவ்வகைத் தீர்த்தந் தம்மு ளடைவினிற் கடவுள் சொற்ற
விவ்வகை நாட்க டம்மி லேவரே யெனினு மூழ்கித்
தெய்வவே தியரைப் போற்றிச் சிறந்தகோ தான நல்கின்
மைவளர் கண்டன் வெள்ளி மால்வரைப் புறத்து வாழ்வார்.(உகூ)

மற்றுமந் நீரி லாடி மழவிடை மறையோர்க் கீயப்
பெற்றிடிற் கயிலை காக்கும் பிரான்கண நாத ராவர்
நற்றவர் பரவு கஞ்ச நான்முகன் வாழு மூழி
சொற்றதோர் வருட மெண்ணிச் சுரரென வும்பர் வாழ்வார். ()

வேலையைத் தாவும் பொன்னி மேதகு புனலி லாடி
யாலயஞ் சூழ்ந்த பஞ்ச தீர்த்தத்தி லடைவின் மூழ்கிற்
பூலய முறினு மாரப் பொற்பத மீயு மல்லாற்
காலையிற் பிரம தீர்த்தம் படியினு முத்தி காட்டும். (உஅ)

ஆயிரங் கோடி தெய்வத் தனித்தல மவற்றுண் மேலாம்
பாயிருங் கடல்வாழ் முல்லைப் பதியினி லன்ன தான
மேயிய லுதவி லந்த வவியொன்றுக் கிமையோர் வாழ்க்கை
மேயின வருடம் பத்தும் பத்துமே விளங்கி வாழ்வார். (உகூ)

வேறு.

ஊர்வன வெனினும் பறவைக ளெனினு முறுவிலங் கெனினுநீ ரிடத்துச், சார்வன வெனினுந் தாவர மெனினுந் தவந்தரு முல்லைமூ தூரைச், சேர்வன வாகி னல்லுருக் கொள்ளுஞ் சிறந்தமா னிடரவண் சேர்ந்து, நேர்வரேல் மறந்து மானச சரசில் நிலைமையாய் வாழ்வர்நன் னெறியில். (௩0)

### வேறு.

ஆதிநா லோதி வல்ல வந்தண னொருவன் றங்கள்
சாதியி லொருவன் றூதை தனக்கிடுந் திதிநா டன்னி
லோதன வுண்டி யுண்டா னூழ்வினைச் செயலாற் கங்குற்
போதினிற் பின்னு மன்னம் பொருந்தியன் றருந்தி னானால்.(௩௧)

அன்னிய ரகத்து னுண்ட லவுடத மருந்த லோதல்
பன்னியைப் பரிந்து சேர்தல் பகர்தந்த சுத்தி செய்த
வின்னல்சேர் தயிலத் தாட லிலையமு தடைக்காய் துய்த்தல்
சென்னியிற் கேச மாற்றல் திதிசெய்வோர்க் கீது தீது. (௩௨)

அருந்துவ தொளித்தல் வேற்றி லருந்துத லரிவை மார்தோள்
பொருந்துதல் பின்னு மன்னம் புசித்தலூர் வழிந டத்தல்
விரும்பியோர் தானம் பற்றல் வேறணி யுடுத்தல் சாலாப்
பெருஞ்சுமை தாங்க லெட்டும் பிழையெனப் பகரு நீதி. (௩௩)

அறந்தனைக் குறியான் வேதத் தருநெறி நீதி யந்தோ
மறந்தன னன்னான் மாள வல்வினை தொடரு நாளி
விறந்தன னிறந்த காலத் தெதிர்காலங் காக மாகப்
பிறந்தன னென்று னன்றோ பிறர்மனை யுண்டி பற்றல். (௩௪)

காருட னூடா வன்னக் கண்மணிக் கயவாய முட்கால்
வேருடைத் தோகைத் தூவி விடிவுசெய் குரல மேலாய்ப்
பாரிடத் தவர்கண் காணாப் பற்றுறும் புணர்ச்சி யின்ன
சீருடைக் கொடியே யென்னத் திரிந்தனன் பறந்து சென்று. ()

இருபிறப் படைந்த மேன்மை யிழந்துதன் னுகரத் தீயா
லெரிபிறங் கடையர் வீட்டி லிறந்திடா நிற்பப் பற்றித்
தருபல பலியூன் கொத்தித் தன்னினத் தோடு மந்தக்
கருமுடப் பறவை முல்லைக் கடிநகர் காணுற் றன்றே. (௩௫)

கடற்பிணா வோச்ச வோச்சக் கடலர்வாழ் மனைக டோறு
முடைப்புலால் முண்மீன் பற்றி முன்றிலிற் பறந்து சூழ்ந்து
தடைப்படா துழலு நாளிற் றகையிலாப் பறவைத் தோற்றம்
விடத்தகும் பொருட்டால் வேத விரிஞ்சதீர்த் தத்தின் பாங்கர்.()

மதிகதிர் பொருந்து மம்மா வாசிநண் பகலில் வேத
விதிமுறை மறையோர் சைவர் வேள்விமெய் முனிவோ ரன்றைத்
திதியினீ ராட வந்நீர்த் திவலையக் கொடிமேற் சிந்த
முதிருநல் லறிவு மெய்தி முற்பிறப் பறிந்து சோர்ந்து. (௩௮)

பாய்ந்துசூழ் பிரம தீர்த்தம் படிந்தது காக ரூப
மாய்ந்தது மாயத் தெய்வ வடிவொடு நின்ற தம்மா
காய்ந்தகா ரிரும்பின் முன்னர்க் காட்டிய விரத மூலி
வாய்ந்தநற் பசும்பொன் னாக்கும் வண்ணமொத் திருந்த தன்றே.

பொன்மலை சேர்ந்த காகம் பொன்வண்ண மாகு மாப்போற்
றன்மையாற் பிரம தீர்த்தந் தனிற்றோய்ந்த காகங் கொண்ட
நின்மல வுருவங் கண்டு நின்றுளோ ரீது போலு
நன்மதை யமுனை கங்கை நல்குமோ வென்று போற்ற. (சO)

விண்ணுறு நெறியிற் போந்த விமானத்தங் கவனை யேற்றி
மண்ணுளோ ரிறும்பூ தெய்த வருங்கண நாதர் மல்கி
யெண்ணுதற் கரிய வின்பத் திந்திர திருவி னோங்குங்
கண்ணுதற் கடவு ணீங்காக் கயிலைமா திசையைச் சார்ந்தார். ()

வேறு.

காக்கைக்கு வல்லான் படைத்தா னுடல்கவ்வு மாலங்
காக்கைக்குப் பௌவ முற்றிருட் பெற்றிட வுண்டகண்டன்
காக்கைக்கு நல்குங் கயிலாய மெய்க்காட்சி யின்பங்
காக்கைக் களித்தனன் றன்னற் பதிகாணி யாக. (சஉ)

பதினாறு தோற்றமற் றக்காக வுருவுற் பவித்தே
யதிபாத கத்து ஞமலிப் பிறப்பா யிரம்பெற்
றிதினீந்தி மாந்த ருருவாய் மிடிசேர்ந் திளைத்துத்
திதியின்றிச் சுற்றிச் சுழல்வர் கதிபல தீயோர். (சஙு)

இவ்வா றுரைத்த வுருவெய் திலனெய்தி னுற்
செவ்வான மேனி விழிமூன்று பொற்செங்கை நான்கொ
டெவ்வாழ்வு நீடு கயிலாய விருக்கை யென்று
லவ்வேக தீர்த்தப் பெருமைக் கினியன்ன துண்டோ. (சச)

தீர்த்தவிசேடச் சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் உஅசு.

—⁂—

## (அ) கருடன் கதிபெற்ற சருக்கம்.

பொன்னுழைப் பணிக டோன்றும் பொற்பென முல்லை மூ
தூர், மன்னவ னருளாற் றோன்றி வரும்வினை யாட்டை யென்று,
றுன்னுதற் கடங்கா தேனு முற்பூத மாகக் கண்ட, தின்னுமோர்
கதைகேண் மின்னென் றின்றருட் சூதன் சொல்வான். (க)

வேறு.

தார்வனப்பிற் சிறந்தறலைத் தணந்துதிரித் தடர்த்துநீர்க்
கார்வனப்பிற் சுருண்டிருண்டு கடைசுழன்ற கருங்குழலாள்
போர்வனப்பில் வாங்குசிலைப் புருவத்தாள் பரந்தநுதற்
சீர்வனப்பிற் றினந்தீட்டுஞ் சிந்தூரத் திலகத்தாள். (உ)

மையடர்ந்து காதடர்ந்து வஞ்சகமா யம்பொதிந்து
மெய்யடர்ந்த தகைத்தோரை வெறுத்தழித்துக் கடைசிவந்து
பொய்யடர்ந்த காமனுக்கும் போர்த்தொழிலின் திறங்காட்டிக்
கையடர்ந்த காமுகரைக் கலகமிடுங் கண்ணினாள். (௩)

களபசந்தச் சேறாடிக் கதிர்த்தரள வடஞ்சூடி
யிளமதிக்கீற் றெழுதிநமக் கெதிரிலையென் றிறுமாந்து
முளரியிள முகைமுகத்து முறுக்கணிபோற் கண்கறுத்துத்
தளர்மருங்குல் தனைவருத்துந் தனக்கோட்டு நலத்தினாள். (ச)

மேகலைகாஞ் சிப்பருமம் விரிசிகைசூழ் கலாபமைந்து
மாகமென்ன வுயிரென்ன வணியாத்த பட்டுடையாள்
தோகைமயில் சாயலாள் தொடருமன்ன நடையினாள்
கோகிலத்தின் குரல்தனக்குங் குறைகாட்டுங் குரலினாள். (ரு)

வேறு.

காவரிக் கிருபொறி கமலங் காவியே
மாவரிக் கிருபொறி வடிவங் கூந்தலே
பாவரிக் கிருபொறி பதநி தம்பமே
வாவரிக் கிருபொறி வான்ம லர்க்கணே. (சு)

வேறு.

கலையொக்கு மங்குலைவெள் கலையாக்குஞ் சொனும்வாயே
விலையொக்கு மெனச்சொன்ன விலைவாய்க்கு மநுராகஞ்
சிலையொக்கும் புருவமர சிலையொக்கு மகலல்குல்
மலையொக்கு மெனுமுலைக மலைதோற்ற மெனும்வடிவம். (எ)

மையொக்கும் மாதர்விழி மாமையொக்குங் குறிகள்மலர்க்
கையொக்கு மின்பசயங் கையொக்க வட்படியே
பொய்யொக்கு மிடைக்கொடிவான் பொன்னாட்ட ரம்பைமார்
மெய்யொக்க விலைவயனைத்து மெய்யொக்குங் குறங்கினாள். (௮)

எண்ணான்கா மிராகவித்தை யேழிசைநா டகவிஞ்சைப்
பண்ணான்கு பதினான்கு பக்குமெழில் வகைதெரிந்து
பெண்ணான்கில் திருமுல்லைப் பெருங்கோயி லுடையார்முன்
விண்ணாடல் போனடிக்கும் வேசிதே வடிமைமின்னாள். (௯)

போகவதி காமுகற்குப் புகலுமிசைப் பனிமொழியா
ளாகவதி ரூபத்தா லயிராணி தனக்கொப்பாள்
மாகவதி பதிநடன வனிதையர்போ னடிக்கவல்லாள்
மோகவதி யெனப்புவியோர் மொழிந்ததிருப் பெயரினாள். (௰)

முன்னீறி லாவிளைஞர் முயங்கிவறு மையிற்றளரப்
பின்னூறு பொன்றனக்குக் குறையென்று பிறர்கேட்க
நன்னூறு போலாக்கி நயந்தவர்செல் வந்துடைத்துப்
பொன்னூறு கைக்குவரின் மெய்க்குவரும் புனர்ச்சிசெய்வாள்.()

வேறு.

பலர்பல மணியிழைப் பணிகள் செய்திடச்
சிலமினார் புதுமலர்த் தெரிய லேந்திடச்
கலவைநற் செப்பினைச் சிலவர் கைக்கொளக்
குலமணி வாயிலிக் கோதை நிற்குமே. (௰௨)

இங்கிலைத் தணங்கவ ரேவல் செய்துற
மின்னலம் பொருமதி வேணி நாயகன்
பொன்னலக் கோயிலிற் புரிய நாடக
நன்னலக் கணிகைபா னயப்ப வாழுநாள். (௰௩)

வேறு.

மாசி லாத வந்தணன் வளங்கு லாவு முத்தர
தேசி மேவு கௌதமை தீர மீதில் வாழ்பவன்
பூசு ரர்க்கெ லாமறைப் பொருள்வி ரித்து ரைப்பவன்
வாசு தேவ னென்னவே வழுத்து கின்ற பெயரினான். (௰௪)

ஒருமை பெற்ற மேன்மையா னிருபி றப்பி னுரிமையான்
மிருதி சொற்ற மூத்தழலின் வேத நான்கின் வல்லவ
னருண்ம இத்த வேள்வியைந்து மறுவ கைப்ப டுந்தொழிற்
பெருமை முற்று மற்றுநீடு பீடு முற்ற பெற்றியான். (யரு)

வாழ்வி னோடு கற்பிசைந்த மாதி னோடு வாழ்மனை
வேள்வி யோடு மந்தணாளன் மேன்மை யோடும் வாழுநாள்
தாழ்வி லாத வன்றனக்கோர் தாழ்வு வந்து சார்ந்தென
வூழ்மனைப் பொருட்டின் மைந்த னொருவன் வந்து தித்தனன்.()

தொடரு மாரி தோன்றுதற்கோர் தூம கேது வாமெனக்
கடல்க டைந்த வானவர்க்கோர் காள கூட விடமெனப்
படரு நீணி லாமதிப் பசுங்க திர்க்கோ ரரவென
வடமொ ழிப்பி ரானிடத்து மைந்தன் வந்து வளரவே. (யஎ)

கருட னென்னப் பெயர்புனைந்து காட்டு சாத கன்மமோ
டருண்ம றைச்ச டங்கியற்றி யார ணங்கொ டுத்தபின்
முருட னாகி யிந்தமைந்தன் மோகி யாகி நாடொறுந்
திருட னாகு மென்றுசோ திடந்தெ ரிந்து செப்பினான். (யஅ)

வேம்பின் மேவு கைப்புமாற்றி மிக்க நற்சு வைபெறப்
பாம்பின் வாய்வி டத்தை மாற்றி யமுதமாப் படுத்தல்போற்
றீம்ப னான மைந்தன்வெய்ய சிந்தை யின்றி ருக்கெலாம்
போம்ப டிக்கி யைந்தஞான போத கம்பு கன்றனன். (யகூ)

தாதை யோது மெய்ம்மொழி சலத்தி டும்மெ ழுத்தெனப்
பேதை மாதர் காதலோதல் பேசு கல்லெ ழுத்தென
வாதை சேர்ம யக்கமெய்தி வரைவி லாத மாதர்தோள்
காத லித்து வந்துமிக்க காம வேலை மூழ்கினான். (உய)

அறங்க டிந்து முறைதிரும்பி யார ணம்ப ழித்துநீள்
மறம்பு ரிந்து சுடர்விளக்கின் மாய வீழும் விட்டில்போற்
கறங்கெ னச்சு ழன்றுநற் காலை முல்லை மாநகர்ச்
சிறந்த வல்லி மேன்மை நண்பர் செப்ப வாசை செய்தபின். ()

பெற்ற தாயர் தந்தைபாற் பிரிந்து வேட்கை வாழ்க்கையாற்
சுற்ற முந்து றந்துசொற்ற தூர்த்த ரோடு கூடியே
யற்றை நாள கத்துள வரும்பொ ருள்க வர்ந்துகொண்
டொற்ற ரோடு தென்றிசைக்க ணுலவை போற் படிந்தனன். ()

கடிகையொன் றிரண்டின் மிக்க காவதங் கடந்துசூழ்
படியி னீடு முல்லையம் பதியில் வந்த டைந்துபூங்
கொடியனாரொ டும்படர்ந்து கோதை நின்று லாயதோர்
வடிவு கண்டு மனமகிழ்ந்து வண்ண வாயி னண்ணியே. (௨௩)

மெய்ப் பொருள் வழிப்படா விகார மோக வேதியன்
பொய்ப் பொருட் பரத்தைபாற் புலன் செல விருப்பொடுங்
கைப் பொரு ளனைத்தையுங் கரந்திடா தளித் தனு
மைப்பெறுங் கயற் கணங்கை வம்மி னென்று கூறினள். (௨௪)

வேறு.

செம்பொனின் மாட மெங்குஞ் சித்தசன் கொடிக ளாடப்
பைம்பொன்மா ளிகைச்சார் வெங்கும் பன்மணிப் பத்தி பாய
வம்பவிழ் பிணைய லாட வளஞ்செய்பூஞ் சேக்கை மீதி
லம்படர் கண்ணி யோடு மணுகின னந்த ணாளன். (௨௫)

பூமலர்த் திருவ னாளும் புகழ்ந்துள மகிழ்ந்து தாவாக், காமனின் பத்தைக் காட்டி மனையைப் படுத்தும் வண்ணம், காமமென் கொங்கை யாரத் தழீஇக்கொண்டு கொவ்வைச் செவ்வாய்த், தேமல ரிகழ்த்தே னல்கிச் சேர்ந்தனள் சுரதஞ் செய்து. (௨௬)

சேந்தநன் கனிமென் பாலிற் றீஞ்சுவை யமுதந் தேக்கிச்
சாந்தவண் களபந் தோய்ந்து தண்மலர்த் தாமஞ் சூடிக்
காந்தளங் கையாள் போற்றக் காமநூல் கலவி காட்டிப்
பூந்தவி சிழியா வின்பங் கருடனும் புணர்ந்து வாழ்நாள். (௨௭)

தாயவெள் ளிவ்வி யாழுந் தொடங்கிநற் கொடியு மேற்றி
நேயமாய் நடத்திக் கையி னிதியெலாந் தொலைந்த வன்றே
யாயவேள் கொடியி றங்கி யாயிழை பொருந்தா ளாகிப்
பாயலு மிழந்து நீங்காப் பரிவுபோய்ப் பிரிவு கொண்டான். ()

தனமிலா வறுமை வந்து சார்ந்திடக் கணிகை சற்று
மனமிலா திருப்ப வாவாண் வராவகை மடமா னென்ன
வினவிலா தயரு மன்றி லென்னநொந் திரங்கிச் சோர்ந்து
சினமிலான் மான மில்லான் றெருத்தலை வாயி னின்று. (௨௯)

அலையுநீர் மதியம் போல வாட்டாலைக் கோது போற்றீ
யுலையாக் கதுபோல் வேழ முண்டதீங் கனிபோ லானு
னிலைதடு மாறி வீழ்வ னினைவறத் திரிவன் மாரன்
கொலைசெயும் பகழி தூங்கக் கோவென முறையிட் டோய்வான்.

மாயவே ளிடையான் பட்டு மனனொடு மலர்ந்து சேர்ந்த
தூயமே னியும்ப சந்து சோற்றினைக் கான்று நின்று
நேயவெண் ணீறு மிட்டு மடலேந்த நின்றே யென்பே
யாயதோ வுனது சிந்தை யடர்ந்ததே நகையே யென்பன். (௯௧)

அன்றிலை வெறுக்கோ கூவி யடுங்குயில் தனையே நோகோ
தென்றலை யொறுக்கோ காமத் தெய்வத்தை வைகோ பாவி
முன்றிலைப் பழிக்கோ சேர்ந்த முகூர்த்தத் துக் கொலையோமாதை
யென்றினிச் சேர்வே னேவன் மெலித்தனை பகையோ வென்ன.

மங்கைமெய்ப் பொருந்தா மார்பை வடிவெலாங் காணாக் கண்ணைக், கொங்கையி லணையாக் கையைக் கொவ்வைவாய் பருகா வாயை, யங்கயல் விழியாள் கூறு மணிமொழி கேளாக் காதைப், பங்கயத் திருப்போ னென்போற் பாவிக்கோ படைத்தா னென்பன். (௯௩)

கண்டகக் கைதை காள்வெங் கலைச்சுரு வினங்காள் புன்னைத்
தண்டலைத் தருக்கா ளென்போற் றவித்திடு மரக்க லங்காள்
முண்டகக் கழிகா ளென்போன் முறையிடு திரைகாள் பாவி
பண்டையிற் பழியோ சேரப் பார்த்தன ளென்றுஞ் சொல்வன்.

சோருவ னழுவன் வீழ்வான் சுழலுவன் படங்கைக் கொண்டே
யூருவ னென்று நிற்பன் ஒய்யென்று முறையோ வென்று
நேருவ னவனபா லங்க ணின்றுளோ ருருகச் சேராத்
தாருவின் வல்லி போலுந் தையலு மவன்முன் சார்ந்தாள். (௯௫)

கண்களுக் கிடும்பி ருந்தாக் காதலி வடிவங் கண்டான்
பண்டனக் கிசைந்த கீதம் பாடினா னாடிச் சூழ்ந்தான்
பெண்களுக் கரசே யான்செய் பெருந்தவப் பயனே பொன்னே
மண்களுக் கரசே யென்றான் மனமிலாள் பழித்துச் சொல்வாள்.

பொருளுண்டே லன்பு முண்டாற் பொருளிலா னனங்க னேனு
மருளுண்டே பரத்தை மாருக் கறிகிலாய் நினைவி லாநீ
மருள்கொண்டா யந்தோ பொய்யை மெய்யெனக் கருதி மாய்வாய்
தெருள்கொண்டா யெனக்குன் மீது சிறிதுமன் பில்லை கண்டாய்.

என்மீதில் வைத்த வன்பி லெள்ளள வெனினு மீசன்
றன்மீதில் வைப்பா யாகிற் றவறுண்டோ பரத்தை மாதர்
முன்மேவு மொருவன் வாயிற் றம்பல முறையிற் பற்றிப்
பின்மேவு மொருவன் வாயி லுமிழ்ந்திடும் பெற்றி கண்டாய். ()

மலப்பிண்ட மென்பு கோத்து வளர்புழு மொய்ப்ப நாறுஞ்
சலப்பிண்ட மன்றோ தீந்து தசையொடுங் குடரைச் சூடி
யுலப்பின்றி மலங்கள் பாயு மொன்பது துளையோ டோங்கும்
புலப்பிண்ட மடவா ராக்கை போகமே யளித்தல் பொய்காண். ()

கல்லொடு புல்லும் பூடு கருமியாங் கிருமி தாருப்
பல்லுயிர் விலங்கு சூழப் பறவையாய் வாரா நின்று
நல்லுருப் பெறுதல் முற்செய் நல்வினைப் பகுதி யாவி
யெல்லைநீர்க் குமிழி யீதே யீடேற்றும் பிறவி கண்டாய். (௪௰)

மானிட யாக்கை கொண்டு மறையவர் குலத்து வந்த
தோனுழை குடம்பை தெற்றித் தூங்கிய வண்டு போலு
மானதோ வுனது சிந்தை யைம்புலப் பகையை வென்று
ஞானநா யகனைப் போற்றி நற்றவ மியற்றொ ணாதோ. (௪௧)

காசிசே ரளவி லெல்லைக் கங்கையை நிகருந் தீர்த்த
மாசிலா மணியான் ஞான வாரியாய் வாழு மூதா
ராசிலாத் தலத்தி னிங்ங னடைந்தனை யிரந்துண் டேனு
மேசிலாத் தருமஞ் செய்தி யெல்லையைப் பிரியா தெய்தி. (௪௨)

பூவினு விலையா னீராற் பூதியால் வழிபட் டேத்தி
நாவினு விறைவர் நாமம் நவின்றிடில் நரகஞ் செல்லா
தாவிபோ மளவு மன்போ டருந்தவம் புரிந்தால் முத்தி
மேவிவாழ்ந் திடலா மென்று விளம்பியவ் வணங்குஞ் சென்றாள்.

உறங்கினான் கையிற் பந்து பொன்பொரு ளனைவுந் தீமை,
மறந்தனன் மறந்தா னன்றே மாதர்மேல் மாதர் நீத்தான்,
அறந்தனைப் புரிந்தான் கையி லிரந்துண்டங் கரனைப் போற்றித்,
துறந்துமெய்ஞ் ஞான முற்றுந் தொண்டர்க்குத் தொண்டு
செய்தான். (௪௪)

ஆணவ வினையு மற்று மாசாணு லரனைப் போற்ற
மாணவ னனைவு மோக மதியினால் மயங்குஞ் சிந்தைக்
கோணைவா ளாலே மாற்றிக் குலத்தொழில் புரியு நாளிற்
றாணுவின் பதியி லாவி தனைவிடு மிறுதி யெய்த. (௪௫)

வாரக முலைப்பி ராட்டி மடிமிசைக் கிடத்தி வேத
பாரகன் களையை மார்பிற் படர்தாணை யதனா லாற்றச்
சேரகத் துயிரே முன்னஞ் செவியுற்ற முல்லை நாதன்
றாரகப் பிரம போகச் சாரூப பதவி சார்ந்தான். (௪௬)

பவத்தொழிற் பரத்தை காதற் பரத்தனும் பதத்தை நாடிச்
சிவத்தொடுஞ் சீவன் முத்தி சேர்ந்தன னென்றால் மேலைத்
தவத்தினோர் தமக்கு முல்லைத் தலத்திறங் கூறற் பாற்றே
யிவற்றையா னுரைக்கப் பெற்ற தெம்பிரா னருளே யன்றே. ()

வேறு.

தில்லைவன மறிகடற்றெண் டிரைபடூர்சா யாவனஞ்சீர்
வில்வவனஞ் சொல்லரிய வேதமொழி வேதவன
முல்லைவனம் பெறற்கரிய முத்திக்கு வித்தாகுஞ்
சொல்லைவனத் தினுஞ்சிறந்து தோன்றுவது முல்லைவனம். (௪௮)

கங்கைநதி யமுனைநதி கவுதமைநன் னதிமாறுக்
துங்கபத் திரைநதியார் துலைக்குகா விரிநதிமெய்
பங்கமுறும் பவமகற்றும் பஞ்சநதி யவற்றுமுந்நீர்ச்
சங்கமகா விரிநதியின் றன்பெருமை சாற்றரிதால். (௪௯)

வேறு.

சிறந்தகா விரியி னெல்லைத் திருமுல்லை வாயி னண்ணிப்
பிறந்தவர் பிறவா வாசம் பெற்றவர் பெருகொன் றில்லை
யிறந்தவ ரிறைவன் றாளி லெய்துவர் நினைப்போர் துன்பந்
துறந்தவர் துறவோ ராலுந் தொழப்படுந் தூயோ ராவர். (௫௰)

காரணங் கடந்து மேலைக் கற்பனை கடந்து மூர்த்தி
பூரண வடிவாய் முல்லைப் பூம்பதி யுறைந்தா னென்றே
யாரணன் முதலா யுள்ளோ ரஞ்சலி கூப்பி வேலைப்
பேரணி முழவார் தெய்வப் பெரும்பதி பிரியா துற்றார். (௫௧)

பிருதிவி யப்பு தேயு வாயுவா காசம் பீடார்
திருவுருப் பெறுமி லிங்கத் தெய்வநற் றான மைந்தி
னொருளுரு மலைகே தார மணிமுத்து குன்றங் காழிக்
குருமலை கயிலை நீங்காக் கோகன வெற்போ டைந்து. (௫௨)

இன்னநற் றலங்க டம்மு ளிருந்திரைப் பாங்கர் முன்ன
மின்னமு நவிற்று நின்ற முதுநக ரிடத்தி லெம்மா
னன்னமென் னடையா ளோடு மமர்ந்திடும் பெருமா னென்று
பன்னரு மன்பர் யார்க்கும் பரிவொடும் பகர்ந்தா னன்றே. (௫௩)

தாரணி மீதி லின்னந் தலங்களில் முல்லை மூதூர்
பூரணு னந்தத் தோடும் புராந்தக னிருந்து வாழுங்
காரண மிதனு லென்றுங் கருத்தினிற் றெரிந்தி லேன்யான்
நாரணன் முதலி னேரு மறிந்திலா ரவனை யன்றே. (௫௪)

இலகுதண் முல்லை மூதா ரெம்பிரா னுை யத்தி
லலகிட மெழுக நாவுக் கரையனர் பணியே செய்யக்
குலவுநெய் விளக்கு மேற்றக் கோதிலா நியமம் பெற்றுர்
மலர்தலைத் தரணி யாளு மணிமுடி நிருப ராவர். (௫௫)

கொந்தலர்த் தொடையல் மாலை குங்குலு வகிலி னுவி
சுந்தரக் கலைக டாவாத் தூயமஞ் சனநீர்ச் சாந்தஞ்
சந்தனத் தொடுகர்ப் பூரஞ் சங்கரன் றனக்கு நல்கும்
வந்தனைத் தவத்தோர் வெள்ளி மால்வரை யதனில் வாழ்வார். ()

கருடன் கதிபெற்ற சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் ௩௪௫.

## (௬) கிள்ளிச்சோழன் முத்திபெற்ற சருக்கம்.

வெள்ளிமால் வரையமர் விமலற் கன்புளான்
வள்ளியோ னெனத்தரும் வண்மை வாய்த்துளான்
புள்ளிவான் புலிக்கொடிப் புலமைப் பொற்புடைக்
கிள்ளிமாக் கதைவளங் கிளத்து வாமரோ. (௧)

தெய்வபூ திகக்கொடி திளைத்துச் சூழ்தலால்
மெய்வருந் தவத்தினர் விமலர் காண்கிலான்
கைவருங் கனகவாள் காட்ட வாண்டெழுந்
துய்வன செய்தவா றுரைக்கற் பாலதோ. (௨)

முல்லைமா தவத்தினன் முளைத்த வுண்மையான்
முல்லையா னெனும்பெயர் முதல்வர்க் கானது
முல்லைவான் கொடியவன் முடியிற் சூழ்தலான்
முல்லைமாப் பதியென மொழியப் பெற்றதே. (௩)

வேறு.

சீரின் மிக்கதென் முல்லையின் வழிபடுந் திறத்தாற்
பாரின் மிக்கது பாவன மானது படைத்தா
னீரின் மிக்கது நீள்சடைக் குறுமுனி நிறுத்த
பேரின் மிக்கதோர் மாசிலா மணியெனும் பெயரே. (௪)

உஞ்சை மாநகர் தென்புகார் பொன்வரை புரைசால்
வஞ்சி கூடலின் மிக்கதா வளம்பல விளம்பச்
செஞ்சு டர்க்கிரி யேயன ஞாயில்கொண் டிலங்குந்
தஞ்சை மாநகர்க் காவலர்ப் பயந்தமெய்த் தவத்தோன். (௫)

வேறு.

நாளினிற் கலிக டந்து நன்னெறி மறுவில் செங்கோல்
தோளினிற் றுணைபு ரிந்து தொன்னெறி மனுவிற் றுங்கி
வேளினிற் சிறந்து பொன்னி விரைவள நாடு காத்து
வாளினிற் பகைது ரந்து கிள்ளிமால் புகாரின் வாழ்ந்தான். (௬)

வாழுநா ளயனுர் தந்த வள்ளலாங் கிள்ளி வேந்த
னேழுநாட் கலிக டந்திட் டிருநிலம் புரக்கு நாளி
னேழுநாட் பதியஞ் சூள்ளா ரெய்துவோர் நாளி னேத்தத்
தாழுநாட் டணியா வாழித் தடங்கட லாட வெண்ணி. (௭)

பாய்பரிப் பந்தி வேழப் பரிமதக் கடகம் பொற்றேர்
காய்கதி ரிலைவேல் வண்டர் கடலொடுங் கதிரோன் மானச்
சேயிளங் குமரர் சூழத் தெண்ணிலாக் கவரிக் கற்றை
சாய்தர முரச மார்ப்பத் தடக்கைவா ரணமேற் சென்றான். (௮)

பொன்னிநீர்க் கன்னி சென்னி போற்றினன் வடபாற் றென்பால்
பன்னிசைத் தலங்கள் கண்டு வளங்களின் விளங்குங் காட்சி
தன்னிக ரில்லா னிக்கண் சாத்தின னுதய னேமி
துன்னினன் விருந்தா மென்னச் சூரியன் குணபாற் சென்றான்.

குணகிரி தோன்றி மேரு குணகிரி சூழ்வான் மேல்பால்
புணரியிற் றோன்றிச் சேறல் புதுமைத்தே யிவ்வா றென்ன
மணமலி யாரின் றாரின் வள்ளியோன் கிள்ளி வேந்தன்
கணமலி தானை மல்கக் கதிரவன் போலுஞ் செல்வான். (௰)

வாரிநீ ருதய நல்க மணிமுர சோதை மல்கச்
சூரிய னொருவ னல்லான் சூழ்கட லாட வல்லா
ஞரிவன் போலு மென்ன வாரிவ ரென்ன வந்தான்
காரிலு முதவு நீர்மைக் காரியல் காட்டு மெய்யான். (௰௧)

அமுதமே கடைந்த ஞான்றோ ராலம்வந் தடைந்தா லென்னக்
குமுதமே காணுங் கோளார் குடைநிழல் மறைப்பக் கண்டான்
தமுதன்மை காட்டித் தந்த தனியிளங் கருப்பஞ் சாராச்
சிமுதநீ தித்தா மேன்மை செயுஞ்சுடர் சிந்தை கொண்டு. (௰௨)

சிற்பர னுரைத்த நூலிற் றினகரோ தயத்து மாற்றம்
பற்பல விதமு மாற்றிப் பற்பணி விடமு மாற்றிக்
கற்பமும் வினவிப் பற்றுங் காலையுந் தவிரும் போழ்து
மற்பயி லிரவி போல்வா னரும்பெருந் தானஞ் செய்து. (௰௩)

இரவிமுன் னமையல் லாது மெழுமதி விளங்க நோக்கி
யரவநீற் கடல்கண் டேகா வர்க்கியங் கரங்கொண் டேற்றிப்
பரவைநீர்ப் புனித நீராய்ப் பயிலுமந் திரத்தாற் றீண்டிச்
சரபவித் திரங்கள் சாத்திச் சங்கற்ப முறையி லெய்தி. (௰௪)

தாதைதன் றாதை மற்றுந் தாதைமூ தாதை மிக்கோர்
பேதையா ரன்னை மார்தம் பெயர்பெறப் பெருநீர் நல்கித்
காதையும் வினவித் தெண்ணீர்க் கடல்குளித் தாடி மிக்க
பூதலம் பொன்னுந் தூசும் பூசுரர் களிப்ப நல்கி. (௰௫)

கண்டகு மெங்கள் பொன்னிக் கன்னியே யெங்கள் வாழ்வே
மண்டலம் புரக்கு மன்னன் மாதவக் குபேரன் வாழ்வே
யண்டரா ரமுதென் றெண்ணி யணிமுடி தாழ்ந்து வீழ்ந்து
விண்டனன் படிந்தான் மன்னன் விதிமுறை நீதி செய்து. (௰௬)

பாடலில் விஞ்சை வல்லோர் பல்லாண்டு பலவுங் கூற
வாடலி லுதக நீர்கொ ளங்கைமா முனிகை யென்ன
நீடலை யஞ்சி யோட நின்றவ னடந்து பொன்னிக்
கூடலிற் சங்கங் கண்ட கொற்றவன் போலுங் கண்டான். (௰௭)

தோளினி லாரந் தாங்கித் துலங்குகே யூரந் தொட்டுத்
தாளினிற் கழல்கள் பூட்டித் தனிமுடி யினிது தாங்கி
வாளிகல் வணங்கச் சாத்தி மணித்துகி லணிந்து வீர
வேளினிற் சிறப்ப வேந்தன் விசயவெம் பரிமேற் கொண்டு. ()

கவரிபா வாடை பாய்மாக் கறங்குதெண் டிரையிற் சூழத்
தவளவெண் சங்க மல்கத் தானையங் கடல்கள் பம்ப
நவநவ முரச வோதை நானிலத் தோதை செய்ய
வுவரியே புரையு மன்னு முதயபா னுவைப்போற் செல்ல. (௰௯)

நாகிளம் புன்னை முத்தும் பவளமும் பொன்னு நல்க
வாகுசே ருடைவாள் கைதை மலர்மடல் பலவு மேந்தச்
சேகுசேர் தாலங் கைகள் விரித்துநின் றிரவு செய்யப்
பாகுசேர் மொழியார் போலு மஞ்ஞைகள் பரதங் காட்ட. (உ௰)

ஆழியங் கடவுள் முத்த மந்துகி ரிறைப்ப வங்க
மேழுய ரியானை மேற்கொண் டெக்காள மேத்தல் போலக்
காழ்புளி னங்க டோறுங் கறங்கிசைப் பறவை யார்ப்பச் [ருன்.
சோழர்தம் பெருமான் கிள்ளிச் சோழர்கோன் குடபாற்சென்()

மேல்திசை மருத்து நேராய் வேகவெம் புரவி செல்லுங்
காலொடு முல்லை வல்லி பிணித்தது கட்டு மாப்போல்
மூலமந் திரத்திற் பாந்தள் தடைப்பட்ட முறைமை போல
வாலுளைப் புரவி நிற்க வுதைத்தனன் றளவைத் தாளால். (உஉ)

தாளிணை யுதைத்துத் கட்டிக் தடக்கையோன் றெடுத்துக் கூவத்
தூளிநின் றெழுந்த தென்று சித்திரத் தாசி நிற்ப
யாளிமொய்ம் பசைத்துப் பின்னர் நோக்கின னார்த்த முல்லை
கோளிணை துரங்கக் காலிற் கொளுவவுங் கண்டு கொண்டான்.()

சிதைத்தனன் கொடியை வாளாற் கலீரிடத் திரும்பி நோக்க
வதைத்தகை வாளுஞ் சோரக் குபீரிடக் குருதி வாரப் [ணி
பதைத்தனன் றுணுக்குற் றேங்கிச் சோர்ந்தனன் செவியிற் பா
புதைத்தன னந்தோ வென்று புலம்பினன் கண்ணீர் பொங்க. ()

வேள்பட்ட கண்ணுன் முல்லை வேதனை தானுங் கொள்ள
வாள்பட்ட கொழும்புண் கண்டான் மாறன்கைப் பிரம்பால் வீச
நாள்பட்ட தழும்பிற் புண்ணீர் சோர்ந்தவோ வென்று நைந்தா
ளுள்பட்டேற் கிந்த வாறே னென்றுநின் றலறி வீழ்ந்தான். ()

அரியயன் காணா தானே யன்பிலா வன்பி னேற்குத், தெரி யொணா வண்ண முல்லை வனத்தினி லிருந்தாய் தீயேன், புரியுமிக் கொலைக்கென் செய்கேன் பொருந்துமோ புனிதா கெட்டே, னெரிவிழிக் கூற்றன் பாத கத்திலுங் கொடிதென் வாளே.(உசு)

என்கொலா மெனது நீதி யென்கொலா மெனது செய்கை
வன்கண னொருவன் றோன்றி மறக்குலம் பிழைத்த வாறே
என்கணீ ரெனக்கே யாகி யெனதுவா ளெனக்கே யாகிப்
புன்கணீர் பொழிய லாமே பொருந்தவந் திண்ண மன்றே.(உஎ)

கோள்கொண்ட மதியங் கூற்றோ குரைகடல் கொடிதோ வன்றி
வாள்கொண்ட வென்கை தீதோ வாளிது நலியக் கற்போற்
றாள்கொண்ட பரியோ கூற்றந் தகைகொண்ட முல்லை தானோ
சூழ்கொண்ட வினையி னேற்குஞ் சொல்லுமா றறியே னென்று.()

மந்திரி வதன நோக்கான் மன்னிளங் குமரர்ப் பாரான்
தந்திரத் தவற்கன் பில்லான் சயசய போற்றி யென்று
கந்தரத் துருவக் கூர்வாள் காட்டின னறுத்த லோடு
மந்தரத் தேர்மே லாக வரசேயென் றொருசொல் கேட்ப. (உகூ)

வேறு.

அந்தர துந்துமி யியங்கண் முழங்கிய வவ்வெல்லை
யிந்திர ரும்ப ருவந்தலர் சிந்தின ரெங்கெங்கும்
புந்தி மகிழ்ந்திட முந்தி நடந்தன பூதங்கள்
கிந்து நிறைந்தது முந்தி யெழுந்தன கீதங்கள். (ஙய)

வானவ ரன்பொடு மாடி நடஞ்செய வந்தார்கள்
பானுவர் துந்துமி வாணரு வந்திசை பாலித்தார்
ஞான பரம்பர நாம சினங்க ணவின்றார்த்தார்
மேனி விளங்கொளி யேர்விடை நின்றது விண்ணத்தே. (ஙக)

கங்கை யிளம்பிறை செஞ்சடை விஞ்சு கவின்கொள்ளப்
பங்கய மொத்திட வாண்முக முக்கணும் பாலிப்ப
வங்கையின் மலர்கொடு வானவர் தாமடி யார்வெய்த
மங்கை பசுங்கொடி பங்கரு ளாளன் வரக்கண்டான். (ஙஉ)

வன்பினன் வண்கணன் வஞ்சக நெஞ்சினன் மாரீசன்
வன்ம மலைத்தவ னுன்றிரு மேனி வடுச்செய்த
வென்பிழை நிந்தனை வந்தனை கொண்டவை யாதேயோ
நின்பரி வென்கொல் பரம்பர வென்றனன் நேரிக்கோன். (ஙங)

### வேறு.

அயர்வுறேல் கிள்ளி வேந்தே யடுத்திந்நாள் தடுத்தாட் கொ
ண்டோ, மயல்விண்டி மறுவொன் றில்லோ மாசிலா மணிகா
ணெம்பேர், துயரெலாந் தவிர்ந்து நம்மிற் சூழ்மதி லால யங்கள்,
வயநெடுங் காலை செய்து மகிழ்விழாக் கண்டு போற்றி. (௩௪)

இந்நெடும் பணிக ளாற்றி யிகல்கடந் தொருகோ லோச்சிப்
பன்னெடுங் காலம் வாழ்தி பாரெலாம் புரந்து பின்னர்
நின்னெடுந் தவத்தா லெம்பா னிலைமைபெற் றுயர்தி யென்று
தன்னெடுந் தனக்கு நேராந் தம்பிரா னருளிச் சென்றான். (௩௫)

தனித்தனி யரசர் யாருந் தாளினைப் பணிந்து போற்றி
மனித்தரிற் சுரரி னின்போல் வரம்பெற்ற பாலர் யாரென்
றினித்தபல் லுலகத் தோர்க ளியம்பிட லின்ப மெய்தி
நனித்திற மதிவல் லானை நகைமுக நோக்கிச் சொல்வான். (௩௬)

என்னையாட் கொள்ள வந்தா னெம்பிரா னுறையுந் தானந்
தன்னையா ரணத்திற் கண்ட தகுதியின் பகுதி யோர்ந்து
பொன்னவி ரெயில்சூழ் வாயிற் புனிதமாங் கோபு ரங்கள்
மன்னுதே ரெழுநால் வீதி வளம்பிற வகுப்பா யென்ன. (௩௭)

காவலன் பணித்த மாற்றங் கைவல னுளங்கொண் டேத்தி
யேவலன் புளதென் வாழ்வென் றிரும்பெரு மகிழ்ச்சி யோங்கத்
தேவர்தம் பெருமா னந்தத் தெய்வமாக் களிறு செல்வோன்
மேவருந் தான மேத்தி மெய்த்திருக் கோயில் கண்டு. (௩௮)

பணிக்கதி ரிருக்கு மௌலிப் பரனவில் வண்ணஞ் செய்த
தனிப்பெருங் கோயி லெங்குந் தமனியந் தன்னால் வேய்ந்து
மனித்தரிற் சுரரி னுகா வண்ணமா மதில்கள் சூழக்
குனித்தபொற் கிரிபோ லெண்ணில் கோபுரந் திகழக் கண்டான்.

பூசுர ரிருக்கை வாட்கைப் புரவலர் வாழ்க்கை பொன்னந்
தேசுசேர் வணிக ரில்லந் திருத்தகு நன்மை யோர்கள்
மாசுதீர் மனைகள் வேள்வி மாதவர் சினக ரங்க
ளாசுதீர் வழிச்செய் தானு லயனெடு மயனே ரன்னான். (௪௰)

சூளிகை முற்ற மாடத் தூணிரை குறடு சூழ்ந்த
மாளிகை சாள ரங்கள் வயங்குபொன் மண்ட பங்கள்
யாளிகள் வயமா கைம்மா யாப்புறு முகப்பு மேலைக்
கோளிகல் பரிதி தீண்டுங் கொடிமுடி யுடனு மற்றும். (௪௧)

சேயிதழ்க் கமல நீலச் செவ்வியந் தெண்ணீர் வாவி
ஞாயிறு நுழையாப் புன்னை ஞாழல்முள் ளரைப்பூங் கைதை
பாயிருஞ் சோலை மல்கப் படருநந் தனவ னங்க
ளாயின தேவர்க் கெய்த வளநிலப் பொருளுஞ் சேர. (சஉ)

விண்ணுல குளவ ளங்கள் வியன்பெறு மூவரி சூழு
மண்ணுல கடைந்தா லன்ன மாக்கதி மூதூர் வாய்ப்பக்
கண்ணுறக் கருணை பொங்கிக் காவல னுவகை பொங்கித்
தண்ணளி பொழிந்து தெய்வத் தச்சற்கு வரிசை செய்து. (சங)

அருள்விழாக் காணு மார்வத் தலைகட லருக நெஞ்சிற்
பெருகினன் சீவ னன்பின் பிழைவராக் களிற்றிற் காண
நிருபனுக் கரிய தீஞ்சொல் நிட்கள சகள மாட்ட
வருவமுங் காண்பா யாக வவனிப வென்ற தன்றே. (சச)

நீங்கொணு மலத்தை நீக்கு நிமலனைத் தொழுது வான்பா
லாங்கெழு மருட்சொல் லோதை யமையுமுன் வெளியே நின்றான்
பாங்குறு முமையா ளோடும் பற்பல கோடி பாநு
வோங்குபே ரொளிச்செம் மேனி யுயரழ கெறிப்ப நின்றான். ()

வேறு.

நரபதி முன்னர்ச் சரணமோ ரிரண்டு நற்கலை மருங்குநான் மார்பு,வரதமோ டபய மான்மழுத் தரித்த மலர்க்கரங் களுமணிக் கண்ணு, மரதனக் குழையு முறுவலார் முகமு மருவ்விழி மூன் றுநீண் முடியும், பரமகல் வியாணி வாமமு மாகப் பாயுமால் விடைமிசை நின்றான். (சரு)

ஐந்துதுந் துமியு மந்தரத் தியம்ப வண்டர்பொன் மாமழை பொழிய, விந்திரா தியர்கள் செயசெய செயென வெம்பிரான் றிருவருட் கோலம், புந்திநான் காகிப் பொறிவழி யைந்திற் புலப் படா வதீதபோ கத்தில், வந்தனை தவத்தில் வளவர்கோன் போற்றி வாழ்வுபோல் வரவெதிர் மகிழ்ந்தான். (சஎ)

இத்தனைப் பகுதிப் பான்மைமிக் கெய்தி யிணையிலாத் திருப் பணி புரிந்திட், டுத்தமன் விழாவும் நடத்திய பின்ன ரோதிய நீதி நூ றெறிந்திட், டத்திற நெறியின் வாசிபொற் பீட மாபர ணுதிக ளமைத்து, வித்தகன் பரிசா ரத்தினோ டாதி வேதியர் விழைந்தி டப் புரிந்தான். (சஅ)

எந்தையெம் பெருமான் மகவிழாப் பெருமை யெடுத்துரை த்தான்மறை வல்லோன், முந்தைநாள் வருணன் மோதிடக் குரு வை முடிந்தனன் முனிமகனுவா,னந்தவெம் பழியாற் பிரமராக்க தனு யரக்கர்வந் தடல்செய மெலிந்தான், வந்துகா ரணைத்தும் படிந்தில முன்னர் வறத்தலால் மாரிமா றியதால். (௪௯)

முல்லைநா யகனைப் பணிந்துவான வர்கள் முறையிட வினிதெழு ந்தருளி, யெல்லையிற் காட்சி மகப்புன லாட விருங்கடல் வேந்த னு மெழுந்து, தொல்லைவெம் பழியைத் துறந்தனன் பெருமான் றுணைமல ரருளினை யேத்த, வல்லையே லவனி யுய்ந்திடும் வானம் வழங்கிடும் வளமிகு மன்னு. (௫௦)

வேறு.

மதிபுனைந்த திருச்சடையான் மாசிமகங் கடலாடல்
விதிபுனைந்த விழாவன்றே விருப்பியருள் புரியும்விழா
துதிபுனைந்த புனனுட்டித் தோன்றலே நடாத்தென்று
கதிபுனைந்த சிவமறைநூல் கற்பனையி னேதினன். (௫௧)

மாசிலா மணியார்க்கு வளர்மதிப்பஞ் சமியாதி
மாசிவிழா மதிநிறைந்த மகத்துநாட் கடலாட
மாசிலாப் பதமுரைத்த மன்னவர்க்கு வரிசைசெய்து
மாசிலா வாரணத்தூர் வலம்வந்து செயுமினென்றான். (௫௨)

மணிமதில் வாயிறொறு மகரதோ ரணங்களுட்டி
யணிசெய்பைங் கதலிமலி யலர்க்கமுகு நிரைநாட்டிக்
கணிகவினுங் கொடிநாட்டிக் களபவிரை நிலமெழுகிப்
பணிமதிள்சூழ் பொன்னேடும் பாலிகைவெண் முளைபரப்பி. ()

வயங்காட்டும் புலிக்கொடியோன் மற்றவர்கள் மகத்துநெறி
வியங்காட்ட மாசிவிழா விடைக்கொடியு மேற்றுவித்தான்
குயங்காட்டு மரம்பையனூர் கோதினட மும்நடத்தி
நயங்காட்டு மிசைமுழக்க நாகருங்கண் டதிசயிப்ப. (௫௪)

ஆதியான் றிருக்கரத்தி லமர்பொற்காப் பணிசாத்தி
வீதிபொற்ப வினிதுசெல விண்ணவரு மண்ணவராய்
மேதினியோ ராங்கவர்கள் மேதக்க பெருங்காட்சிக்
கோதிலா வோலக்கங் கொண்டருளக் கண்டனனல். (௫௫)

இத்தகைய பெருஞ்சிறப்பி னெம்பிரான் றெய்வவிழா
வுத்தமநா ளொன்பதுங்கண் டியரும்பொற் றேரூர்ந்து
நித்தவிழா மகிழ்ந்தருளி நித்தமன்பர்க் கருள்புரிந்து
தத்துதிரைக் கடல்விழாக் கண்டருளத் தொடங்கினன். (௫௬)

வேறு.

அடலுடை நெடுவேற் கோமா னண்ணலெம் மான்பொன் செய்த
தடமலர் முல்லை மூதூர்த் தனிவிழாக் காண்டு மென்று
படுசுடர்ப் பகலோன் வந்து பணிந்திட விழிந்த தேபோற்
கடல்வழி யிருமருங்கு நிறைவன கடவுள் வையம். (ருஎ)

அங்கவர் செம்பொற் றேர்வா யடற்பரி போலு மாங்கண்
பைங்கதிர்க் கற்றை சேர்க்கும் படிவரும் பரவை வெந்து
சங்கரன் வருமா கண்டு தானெதிர் வேண்டு நீராச்
செங்கரம் விரித்தா லொக்கு மணிக்கொடி விரித்த சீர்கள். (ருஅ)

அளிமுரல் குன்று தோறு மலமரும் புயல்கள் போலும்
புளினவெண் குன்று தோறும் பொற்கொடி யாடை யாட
வொளிதரு சோதி பானு வுதயபொற் கிரணம் போலுந்
தளிர்புரை துகில்வி ரித்துத் தரையெலா மலர்சொ ரிந்தார். (ருகூ)

சீரணி கும்ப மொன்று தென்மலை முனியைப் போற்றி
வாரணக் கடல்நீர் முத்தும் வாங்கியுட் கொண்டா னென்னுங்
காரண முளதோ வென்று கலங்கினீர் காணு மென்று
பூரண கும்ப ராசி பொற்புற வலங்க ரித்தார். (சுO)

ஐயர்மால் விடைமேற் செல்ல வகில்நறும் புகைகள் காட்டித்
துய்யகர்ப் பூரத் தூளி தூவினர் வான மோங்க
வையகம் விளங்கக் கண்ட மகவிழா மாகந் தன்னிற்
பெய்யவே கதிர்ம றைக்கும் பின்பனிப் பீடு போலாய். (சுக)

அணிமகத் திருநாள் முந்நீ ராடினே ரேகு மாறு
கணிதமில் விமான மெய்துங் காட்சிபோற் கடலின் மீது
பணிநெடும் புவியோர் தேடாப் பற்பல பொருளு நீல
மணிகளு நிறைந்து வான்றோய் மரக்கலக் குழாங்கள் மல்க. ()

பாத்திர மறிந்து நல்காப் படிறர்போ லமுத மெல்லா
மேத்திய விண்ணோர் போற்ற விடமிடோ மிவர்க்கென் றஞ்சி
வேத்திடுந் துகிரு முத்தும் வெண்டிரைக் கரத்தா லள்ளிச்
சாத்திறற் போலும் வேலை தான்மணி கொழித்த தங்கண். (சுங)

கங்கையிற் சிறப்ப வேதக் கடிமணங் காட்டி யெம்மான்
பங்கயத் தாளி லாட்டப் பரவையி லிருகாற் றீண்டி
யங்கண்மா ஞாலங் காக்கு மவனிலும் பவனி மானத்
தங்கிய விண்ணோர் மண்ணோர் தாழ்ந்தனர் புயல்கள் போல. ()

வருந்தவ ரெழுவர் மாதர் வானவர் மகளி ராடிப், பெருந்தவப் பேறு பெற்றுப் பிறைமுடிப் பெம்மான் பாதம், பொருந்தினர் பணிக வித்துப் பொருந்துபூண் கொள்வார் போற்பின், குருந்தெறி கோலம் வேலை கொண்டது முண்டு மாதோ. (கூரு)

எண்ணில்சீர் வளங்கொண் டோங்க விவ்வண்ணங் கடனீ ராடிப், புண்ணிய முதல்வன் கோயில் புகுந்தனன் புவியோர் வாழக், கண்ணிறற் கிள்ளி வேந்தன் கடல்விழாக் காட்சி கண்டு, மண்ணிலா முயிர்கட் கெல்லாம் வான்பொருள் வழங்கி னானே.()

வேறு.

பன்னிரு ககன வாதித்தர் வீதி பவனியின் பேரொளி செய்யப், பன்னிரு சுடரன் றெருசுட ரின்றும் பகர்வது முண்டென விளங்கிப், பன்னிரு தடக்கைப் பாலகன் பரவும் பரம்பொருள் பன்னிரு திங்கள், பன்னிரு விழாவுங் கண்டுபார் முல்லைப் பதியில்வாழ்ந் திருந்தனன் பன்னாள். (கூஎ)

வேறு,

முல்லை மாவனத் தெர்பிரான் றிருப்பணி முடித்துச்
சொல்ல ரும்பெருந் தோற்றமே மாற்றிமெய்த் தோன்ற
லெல்லை யில்லதோர் தமரொடுந் தானைய ரோடுஞ்
செல்லு தற்கருங் கயிலைமால் வரைப்பதி சேர்ந்தான். (கூஅ)

நரகி டைப்படு வோர்க்கொரு பாத்தைசீர் நடுவன்
குரவ னெனக் கூறுசொற் குறிகொளுங் குணத்தாற்
புரவு பூண்டிடத் தோன்றிமா சகற்றியப் புனிதர்
பரமன் மால்வரை யடைந்தன னென்பது பயனே. (கூகூ)

வாழ்க வாரண முல்லைமா வனத்திறம் வளர்க
வாழ்க மாசிலா மணியடித் தாமரை வண்மை
வாழ்க சைவவைந் தெழுத்தியல் வளவிய நீறு
வாழ்க பூதலத் தடியவர் மன்னவர் மகிழ்க. (எ0)

கிள்ளிச்சோழன் முத்திபெற்றசருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் சகரு.

திருச்சிற்றம்பலம்.

முல்லை[...] வாழ்க

MADRAS-1

# பாடபேதம்.

| பக்கம் | பாட்டு | வரி | பாடம் | பேதம் |
|---|---|---|---|---|
| ௩௨ | ௪௭ | ௪ | தத்வமசி | தத்தொமசி |
| ௩௩ | ௫௨ | ௩ | பாலி | பாவி |
| ௩௮ | ௨௭ | ௪ | தகமிருக் | தருமிருக் |
| ,, | ,, | ,, | தவமுருத் | தவமிருத் |
| ௫௰ | ௨௪ | ௪ | பெறுங் | பொருங் |
| ,, | ௨௭ | ௪ | சிழியா | சிகழா |
| ௫௧ | ௩௨ | ௪ | ஞவேன்மெ | வேனென்மே |
| ௫௩ | ௪௯ | ௪ | போக | மோத |
| ௫௯ | ௰௯ | ௨ | குபேரன் | கவேரன் |
| தக்கிணம் | தக்கணம் | | தெக்கிணம் | தெக்கணம் |

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| viii | ௧ | ௮ | விலைப் | விலைச் |
| ௭ | ௨ | ௩ | ததஞே | தனஞே |
| ௰௨ | ௰௫ | ௨ | ளாமா | ளா |
| ௩௯ | ௩௭ | ௩ | செப்கை | செய்கை |
| ௪௩ | ௨௰ | ௧ | தீர்த்தங் | தீர்த்தத் |

**Printed at the Thirupurasundari Press, Shiyali.**

உ

## திருக்கைலாய பரம்பரைத்

# தருமபுரவாதீனத்துச்

## சைவநூல்கள்.

தருமையாதீனத்துப் பண்டாரசாத்திரங்களாகிய

(௧) சதமணிக்கோவை, (௨) ஞானதீக்ஷாத்திரயம், (௩) துகளறுபோதம், (௪) ஞானப்பிரகாசர் திருச்செந்தூரகவல், (௫) தத்துவப்பிரகாசம், (௬) ஞானப்பிரகாசர் தசகாரியம், (௭) சிவபோகசாரம், (௮) முத்திநிச்சயப்பேருரை, (௯) பேரானந்தசித்தியார், (௰) திரிபதார்த்தரூபாதி தசகாரியம், (௧௧) பதிபசுபாசப்பனுவல், (௧௨) சிவானந்தமாலை, (௧௩) சாம்பிரதாயதீபம், (௧௪) ஞானாவரணவிளக்கக்குறள், (௧௫) பண்டாரமும்மணிக்கோவை, (௧௬) சித்தாந்தநிச்சயம், இவற்றுட்பொருளை விளக்கும் சிவாநுபோகசாரம், பரமததிமிரபாநு, பரமதசங்கற்ப நிராகரணம், பரமோபதேசம், ஐக்கியவியல், சிவதருமோத்தரம், சைவசமயநெறி, வடமொழியில் சச்சிதானந்த இருத வியாக்கியானம் (சிவஞானபோதம்), வர்ணாச்ரம சந்திரிகை, சைவசந்நியாசம் முதலியன.